# புதிய ஜனநாயகம்

ஆகஸ்டு 2013
ரூ.10.00



## ஜூலை–18:

# “மாருதி நிறுவனத்துக்கு எதிராகத் தொடர்கிறது தொழிலாளர் போராட்டம்! போராடும் மாருதி தொழிலாளர்களுக்குத் தோள் கொடுப்போம்!”

## – புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம், ஆர்ப்பாட்டம்



**கா**ர்ப்பரேட் பயங்கரவாதத்துக்கு எதிரான மாருதி தொழிலாளர்களின் போர்க்குணமிக்க போராட்டம் ஜூலை 18 அன்று ஓராண்டு நிறைவடையும் நிலையில், அந்நாளில் மாருதி ஆலை அமைந்துள்ள மானேசர் நோக்கி தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு ஊர்வலமும் மறியல் போராட்டத்தையும் நடத்தத் தீர்மானித்து, நாடு தழுவிய தொழிலாளர் வர்க்க ஆதரவைக் கோரியிருந்தனர். மாருதி தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும் தீவிரமாகிவரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை வீழ்த்த அறைகூவியும் தமிழகத்தில் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களின் ஆதரவைத் திரட்டும் வகையில் துண்டுப் பிரசுரங்களுடன் பிரச்சாரத்தை மேற்கொண்டு, ஜூலை 18 அன்று பேரணி - ஆர்ப்பாட்டங்களையும் தெருமுனைக் கூட்டங்களையும் நடத்தின.

புதுச்சேரியில், ஜூலை 18 அன்று புதுச்சேரியிலுள்ள மாருதி சுசுகி ஷோரூம் அருகிலிருந்து புரட்சிகர அமைப்புகளின் பேரணி தொடங்கியது. செங்கொடிகளுடன் இந்த நிறுவனத்தின் முன்பாகத் தோழர்கள் திரளத் தொடங்கியதும், அரண்டு போன மாருதி நிறுவனத்தினர் முகப்பில் இருந்த கார்களை பின்புறத்துக்கு அவசரமாகக் கொண்டு சென்று வாயிற்கதவையும் பூட்டிக் கொண்டனர். மாருதியின் முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராக முழக்கமிட்டபடியே சென்ற இப்பேரணியின் முடிவில், ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஓசூரில், முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்க வட்டாட்சியர் அலுவலகம் அருகிலிருந்து பேரணியாகப் புறப்பட்ட இப்புரட்சிகர அமைப்புகள், தோழமை அமைப்புகளோடு இணைந்து நகராட்சி அலுவலகம் முன்பாக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதாகக் குற்றம் சாட்டிய போலீசு, முன்னணியாளர்களைக் கைது செய்து பின்னர் விடுவித்தது.

தஞ்சையில், ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள மானேசரின் மாருதி ஆலைத் தொழிலாளர்களுக்காக நாம் ஏன் போராட வேண்டும் என்பதை விளக்கி ரயிலடி முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாருதி மட்டுமின்றி, பல்வேறு துறைகளில் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கமும் பயங்கரவாதமும் தலைவிரித்தாடுவதை விளக்கி, இவற்றுக்கு எதிராக மீண்டும் ஒரு சுதந்திரப் போரை நடத்த வேண்டிய அவசியத்தை முன்னணியாளர்கள் விளக்கினர்.

சென்னையில், அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியில் காலை முதலாக தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளில் பிரச்சாரத்தோடு ஆங்காங்கே தெருமுனைக் கூட்டங்களையும் நடத்திய இப்புரட்சிகர அமைப்புகள், மாலையில் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் அருகில் தெருமுனைக் கூட்டத்தை நடத்தின. முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடாமல் தொழிலாளி வர்க்கம் விடுதலையடைய முடியாது என்பதை உணர்த்தி மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிரான முழக்கங்களுடன் நடந்த இக்கூட்டம் தொழிலாளர்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

ஜூலை 18 அன்று, மானேசரில் மாருதி தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்குத் தடை விதித்து, தனது வர்க்கப் பாசத்தைக் காட்டிய மத்திய - மாநில அரசுகள், ஏறத்தாழ 10,000-க்கும் மேற்பட்ட போலீசைக் குவித்து, தடையை மீறி பேரணியாகச் செல்ல முயன்ற மாருதி தொழிலாளர்களை வழியிலேயே மறித்து, முன்னணியாளர்களைக் கைது செய்தது. இப்போராட்டத்தை ஆதரித்து பிற ஆலைகளிலிருந்து ஊர்வலமாக வந்த தொழிலாளர்களையும் இதர பிரிவு உழைக்கும் மக்களையும் முன்னேற விடாமல் தடுத்து விரட்டியது. தொடரும் இத்தகைய அடக்குமுறைகளை எதிர்கொண்டு, இதர பிரிவு உழைக்கும் மக்களின் ஆதரவோடு பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு முன்னுதாரணமாகத் திகழும் மாருதி தொழிலாளர்களின் நியாயமான போராட்டம் தொடர்ந்து முன்னேறி வருகிறது.




– பு.ஜ. செய்தியாளர்கள்

## பீகார்-குழந்தைகள் சாவு:

# கிரிமினல்மயமான அரசமைப்பே முதல் குற்றவாளி!

கடந்த ஜூலை 16-ஆம் தேதி பீகார் மாநிலம், சரண் மாவட்டம், தர்மசதி கண்டவான் கிராமத்தில் உள்ள பள்ளியில் மதிய உணவருந்திய 80-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உணவு நஞ்சாகிப் போனதால் சிறிது நேரத்தில் வயிற்றுவலியால் துடித்தும் வாந்தி எடுத்தும் மயங்கிவிழுந்து, சிகிச்சையளிக்கும் முன்னரே பெற்றோரின் கைகளிலேயே 23 குழந்தைகள் துடிதுடித்து மாண்டு போன சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது.

இந்தியாவில் உள்ள அனைத்து ஆரம்பப் பள்ளிகளிலும் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை மாநில அரசுகள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று 2001-இல் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், போதிய நிதியோடு அடிக் கட்டுமானங்களை உருவாக்காமல் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதால் அலட்சியமும் ஊழலும் முறைகேடுகளும் தலைவிரித்தாடுகின்றன. பல மாநிலங்களில் தன்னார்வக் குழுக்களின் (அரசு சாரா நிறுவனங்களின்), மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொறுப்பில் சத்துணவுத் திட்டம் விடப்பட்டுள்ளது. அதனைப் பெயரளவில் மேற்பார்வையிடுவதோ அதிகார வர்க்கம். ஊழல் மலிந்துள்ள நாட்டில் இவர்கள் சேவை மனப்பான்மையுடன் மக்களுக்குப் பொறுப்பாக இருப்பார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. 2011-இல் ஒரிசா அமைச்சரான பிரமீளா மல்லிக் மதிய உணவுத் திட்டத்தில் பல கோடி ஊழல் செய்த விவகாரமும், மதிய உணவுத் திட்ட ஊழல்களை விசாரிக்க 2012 -இல் கர்நாடக லோக் ஆயுக்தா நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதும் இத்திட்டத்தில் புழுத்து நாறும் ஊழல் மோசடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

குழந்தைகளைப் பலிகொண்ட பள்ளியின் மதிய உணவில் ஆர்கானிக் பாஸ்பரஸ் என்ற பூச்சிக் கொல்லி மருந்து கலந்ததற்குத் தலைமையாசிரியையின் பொறுப்பின்மைதான் காரணம் என்று குற்றம் சாட்டி கைது செய்தும், கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள கல்வி அதிகாரியை பணி நீக்கம் செய்தும் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் காட்டுகிறது, பீகார் அரசு. நெய்வேலியில் மதிய உணவில் கெட்டுப் போன முட்டைகளை உண்டு மாணவிகள் மயக்கமடைந்த விவகாரம் பரபரப்பானதும், பள்ளியின் தலைமையாசிரியரும் சமையலாளரும் முதலில் சாப்பிட்ட பிறகே குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டுமென்று உத்தரவு போடுகிறார் ஜெயலலிதா.

ஊடகங்களின் பரபரப்பும், அரசின் விசாரணையும், காரணமானவர்களைப் பணிநீக்கம் செய்து தண்டித்து விட்டு, இனி எல்லாம் முறையாக நடக்கும் என்பதாகப் பிரமையூட்டும் இத்தகைய தொடர் நிகழ்வுகள், இன்றைய அரசியலமைப்பு முறையின் படுதோல்வியையே மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன. மீண்டும் இத்தகைய கொடூரங்கள் நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. ஏனெனில் இத்தகைய திட்டங்களை மக்கள் கண்காணிக்கவோ, முறைகேடுகளைத் தடுக்கவோ அதிகாரமில்லை. ஊழல்-மோசடிகளில் ஈடுபடும் அதே அரசு சாரா நிறுவனங்களிடமும், அதிகார வர்க்க, போலீசு, நீதி, நிர்வாக அமைப்பு முறையிடம்தான் பொறுப்புகளும் அதிகாரமும் அளிக்கப்படுகிறது.

பீகாரில் மாண்டுபோன குழந்தைகளைக் கையிலேந்திக் கொண்டு பெற்றோர்களான அடித்தட்டு மக்கள் கதறிய காட்சியும், அக்குழந்தைகளின் உடல்களை அப்பள்ளியின் முன்னேயே புதைத்துப் பொதுக் கல்லறை எழுப்பியிருப்பதும் மாளாத் துயரமாக நெஞ்சைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. இத்தகைய கொடூரங்களும், துயரங்களும் இனியும் தொடராதிருக்க வேண்டுமானால், தற்போதைய அரசியலமைப்பு முறையின் தோல்வியை அம்பலப்படுத்தும் வகையில், மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதியதொரு அரசியலமைப்பு முறையை நிறுவும் திசையில் போராட்டங்களைக் கட்டியமைக்க வேண்டும். இதுதான் உண்மையான மக்கள் பணி; அரசியல் பணி.


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 28 இதழ்: 10

ஆகஸ்டு 2013

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# செல்லாக்காசாகிய ரூபாய்:

# மறுஅடகு வைக்கப்படும் இந்தியா!

**ரூபாய் மதிப்புச் சரிவையும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையையும் காட்டி நாட்டையே பார்சல் கட்டி அந்நிய முதலாளிகளிடம் விற்கத் துணிகிறார், மன்மோகன் சிங்.**

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து விழுந்திருப்பது மற்றும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை (உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஈட்டப்படும் அமெரிக்க டாலர் வருமானத்தைவிட, இறக்குமதிக்கு ஆகும் டாலர் செலவு அதிகமாவதால் ஏற்படும் பற்றாக்குறை என்று இதனைச் சுருக்கமாகப் புரிந்து கொள்ளலாம்) சமாளிக்க முடியாத அளவிற்கு அதிகமாகியிருப்பதைப் பற்றித்தான் கடந்த ஒரு மாத காலமாக மன்மோகன் - ப.சிதம்பரம் கும்பல் ஒப்பாரி வைத்து வருகிறது. 2008-க்கு முன்பு ரூ.40/- ஆக இருந்த அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இன்று ரூ.60/-ஐத் தாண்டிச் சரிந்து விழுந்துவிட்டது. 2012-13 நிதியாண்டு நிலவரப்படி நடப்புக் கணக்குப் பற்றாக்குறை 9,420 கோடி அமெரிக்க டாலராக (இன்றைய மதிப்பின்படி 5,65,200 கோடி ரூபாய்) அதிகரித்திருக்கிறது.



அந்நிய முதலீடுகளைக் கவரும் நோக்கத்தோடு அமெரிக்காவில் நடத்தப்பட்ட அமெரிக்க-இந்திய வர்த்தக கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றும் நிதியமைச்சர் ப.சிதம்பரம்.

இந்திய அரசிடம் ஏறத்தாழ 29,000 கோடி அமெரிக்க டாலர்கள் அந்நியச் செலாவணி கையிருப்பாக இருக்கிறதாம். இதனைக் கொண்டு நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சமாளிக்கலாம் என்றால், அந்நிய முதலாளிகளிடம் வாங்கியிருக்கும் 17,200 கோடி டாலர்கள் பெறுமான குறுகிய கால கடனை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அடைக்க வேண்டிய தவணை முன்னால் வந்து நிற்கிறது. இருப்பதைக் கொண்டு இரண்டையும் அடைத்து விட்டாலோ, இறக்குமதி செய்வதற்குத் தேவையான அமெரிக்க டாலருக்குப் பற்றாக்குறை ஏற்படும்; அமெரிக்க டாலர் கையிருப்பு காலியாகிப் போனால், இந்திய ரூபாய்க்குக் கழிப்பறைக் காகிதத்திற்கு இருக்கும் மதிப்புகூடக் கிடைக்காது; பங்குச் சந்தையிலும் தொழில்துறையிலும் அமெரிக்க டாலர்களைக் கொண்டுவந்து கொட்டியுள்ள அந்நிய நிறுவனங்களுக்கு மஞ்சக் கடுதாசியைத் தவிர வேறெதையும் கொடுக்க முடியாது என்கிற நிலைமைதான் ஆட்சியாளர்களைத் திணற வைப்பதாக உள்ளது.

அமெரிக்க அணு உலைகளை இறக்குமதி செய்வது குறித்து அமெரிக்காவின் துணைக் குடியரசுத் தலைவர் ஜோ பிடேனுக்கும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இடையே டெல்லியில் நடந்த பேச்சுவார்த்தை.



தனியார்மயம் - தாராளமயத்திற்கு மாற்று இல்லை என அடித்துப் பேசி, இந்தியாவை ஏகாதிபத்திய நாடுகளின் வேட்டைக் காடாக மாற்றுவதற்கு வித்திட்டவரே மன்மோகன் சிங்தான்; நாடாளுமன்றத்திற்கே தெரியாமல், களவாணித்தனமாக ''காட்'' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, இந்தியப் பொருளாதாரத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையை ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் தாரை வார்த்துக் கொடுத்தவரும் மன்மோகன் சிங்தான். இவ்வளவும் செய்துவிட்டு, இப்பொழுது இந்த நெருக்கடிக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பது போல, மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் பொருளாதாரம் இன்னும் நெருக்கடியி

லிருந்து மீளாததால்தான், இந்தியாவை இப்படிபட்டதொரு நெருக்கடி திடீரெனத் தாக்கிவிட்டதைப் போல காட்ட முயலுகிறார்; மிக முக்கியமாக, இந்த நெருக்கடிக்கும் தனியார்மயம்-தாராளமயத்திற்கும் தொடர்பே இல்லாதது போல நடந்து கொள்கிறார், அவர்.




**தனியார்மயம்-தாராளமயத்தை அதன் கடைகோடி எல்லைவரை அமல்படுத்திட வேண்டும் என்ற தமது நோக்கத்தைத் தடையின்றி ஈடேற்றிக் கொள்ளுவதற்கு இப் பொருளாதார நெருக்கடிகளைச் சாக்காகப் பயன்படுத்தி வருகிறது, மன்மோகன்சிங் அரசு.**

இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிக்கும் மேற்கு ஐரோப்பிய நெருக்கடிக்கும் தொடர்பிருக்கும் அதே சமயம், இவையிரண்டுமே தனியார்மயம்-தாராளமயம் ஏற்படுத்தியிருக்கும் கட்டமைப்பு நெருக்கடியாகும். இன்னும் சொல்லப் போனால், சர்வதேசப் பொருளாதாரம் செளக்கியமாக இருந்த காலத்திலும் இந்தியப் பொருளாதாரம் இப்படிப்பட்ட நெருக்கடியைச் சந்தித்திருக்கிறது என்பதே உண்மை. இந்திய அரசு உலக வங்கியின் கட்டளைக்கு ஏற்ப இந்தியப் பொருளாதாரத்தை மாற்றி அமைக்கத் தொடங்கிய காலந்தொட்டு, 1980-க்குப் பின் ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் இந்தியா இதேபோன்ற நெருக்கடியைச் சந்தித்து வந்திருக்கிறது.

தனியார்மயம்-தாராளமயத்தின் தொடக்கத்தில் அந்நிய முதலாளிகள் தாமே நேரடியாகத் தொழில் தொடங்குவதற்கும், மேற்குலகிலிருந்து நுகர் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இத்தாராள அனுமதியால் ஏற்பட்ட 'வளர்ச்சி' 1990-களின் இறுதியில் நீர்க்குமிழி போல உடைந்தது. இந்த மந்த நிலையைச் சாக்காகக் காட்டி, கடன் சந்தை, பங்குச் சந்தை, வங்கிகள் உள்ளிட்ட நிதித் துறையில் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தினால்தான் நாடு முன்னேறும் எனக் கூப்பாடு போட்ட ஆளுங்கும்பல், இத்துறைகளில் அந்நிய நிதி மூலதனம் வெள்ளமெனப் பாய்வதற்கு ஏற்ப பல்வேறு சலுகைகளை வழங்கின; கட்டுப்பாடுகளை நீக்கின. இந்தச் சீர்திருத்தங்கள் அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளைவிட, இந்தியாவில் செய்யப்படும் முதலீட்டிற்கு அதிக வட்டியும் இலாபமும் கிடைப்பதை உறுதி செய்ததால், பன்னாட்டு நிதி மூலதனம் இந்தியாவையும் குறிவைத்து இறங்கியது. 2008-இல் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரங்கள் மாபெரும் மந்தத்தில் சிக்கிக் கொண்ட பிறகும்கூட, அந்நிய நிதி மூலதனம் இங்கு பாய்வதில் எவ்விதத் தடங்கலும் ஏற்படவில்லை.

இந்த நிதிச் சீர்திருத்தங்கள், இந்தியப் பொருளாதாரம் 2003-2008 ஆம் ஆண்டுகளில் 8 சதவீத 'வளர்ச்சி'யை எட்டிப் பிடிக்கக் காரணமாக அமைந்த அதே சமயம், இந்தியாவின் அந்நியக் கடன் மற்றும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை வீங்க வைத்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை 2.5% சதவீதத்துக்குள் இருக்க வேண்டும் என இந்திய ரிசர்வ் வங்கி வரம்பு வைத்துள்ள நிலையில், தற்போது இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அந்த வரம்பைவிட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது. மார்ச், 2009-இல் 22,550 கோடி அமெரிக்க டாலராக (13,53,000 கோடி ரூபாய்) இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக் கடன், டிசம்பர் 2012-இல் 37,630 கோடி அமெரிக்க டாலராக (22,57,800 கோடி ரூபாய்) அதிகரித்திருக்கிறது. இந்தக் கடனோடு, இந்தியா திருப்பித் தர வேண்டிய அந்நிய முதலீடுகளையும் கணக்கில் கொண்டால், இந்தியாவின் மொத்த அந்நியக் கடன் மதிப்பு டிசம்பர் 2012-இல் 72,390 கோடி அமெரிக்க டாலராகும் (43,43,400 கோடி ரூபாய்).

இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் சர்வதேசக் கடன் சந்தையில் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் 2003-ஆம் ஆண்டுக்குப் பின் படிப்படியாகத் தளர்த்தப்பட்டதுதான் இந்தியாவின் அந்நியக் கடன் எகிறிப் போயிருப்பதன் பின்னுள்ள முக்கியமான காரணமாகும். மார்ச்

''இந்தியாவின் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய மூலதனம் நுழைவதற்கு உள்ள தடைகளை நீக்க வேண்டும்'' எனக் கூறிய அமெரிக்க அதிபர் ஒபாமாவைக் கண்டித்துத் தமிழ்நாடு வர்த்தக சங்கம், கடந்த ஆண்டு ஜூலையில் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன் நடத்திய கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



# வரிக்கொள்கையை தீர்மானிப்பது யார்?

பட்ஜெட் பற்றாக்குறை அதிகரிப்பதைவிட, அந்நியக் கடனும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையும் அதிகரித்துக் கொண்டே போவதுதான் அபாயகரமானது. ஆனால், இந்திய ஆளுங்கும்பலும் முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களும் பின்னிரண்டைப் பற்றிப் பேசாமல், அவற்றுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்காமல், பட்ஜெட் பற்றாக்குறை அதிகரிப்பதைத்தான் ஊதிப் பெருக்கி வருகிறார்கள். பட்ஜெட் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தாவிட்டால், இந்தியாவின் கடன் பெறும் தகுதியைக் குறைத்துவிடுவோம் எனச் சர்வதேசதர நிர்ணய நிறுவனங்கள் கடந்த ஆண்டு மத்தியில் மிரட்டின. இதைக் காட்டியே, டீசலுக்கும் சமையல் எரிவாயுவுக்கும், உரத்திற்கும் கொடுத்துவந்த மானியத்தையும் வெட்டியும்; சமூக நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டைக் குறைத்தும், சர்வதேசத் தர நிர்ணய நிறுவனங்கள் விரும்பியபடி இந்த ஆண்டிற்கான பட்ஜெட்டைத் தயாரித்தார், ப.சி.



பாகிஸ்தானால் ஏவிவிடப்படும் முசுலீம் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு எதிராக சண்டமாருதம் செய்யத் தயங்காத இந்திய ஆளுங்கும்பலும் ஓட்டுக்கட்சிகளும் சர்வதேச தர நிர்ணய நிறுவனங்கள், அந்நிய முதலீட்டாளர்கள் என்ற இந்தச் சந்தை பயங்கரவாதிகள் விடும் மிரட்டல் முன் வெலவெலத்துப் போய் நிற்கிறார்கள். வோடோஃபோன் நிறுவனம் இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய 11,000 கோடி ரூபாய் பெறுமான மூலதன ஆதாய வரியைச் செலுத்தத் தேவையில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தவுடன், வரி ஏய்ப்பைத் தவிர்க்கும் பொது விதிமுறைகள் 2012-13 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதற்கு எதிராக அந்நிய முதலீட்டாளர்கள் பஞ்சாயத்துக் கூட்டத்தை நடத்தியவுடனேயே, அந்த விதிமுறைகளைக் கிடப்பில் போடும் நோக்கத்தோடு ஷோமே கமிட்டியை அமைத்தார், மன்மோகன் சிங். அந்த கமிட்டியும் தமது அந்நிய எஜமானர்கள் விரும்பியபடி அவ்விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை மூன்றாண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

இந்தியாவின் வரி விதிப்பு முறையை அந்நிய முதலீட்டாளர்களும் கார்ப்பரேட் நிறுவனங்களும்தான் தீர்மானிக்கின்றன என்பதற்கு இன்னும் பல உதாரணங்களைத் தரலாம். குறிப்பாக, தற்பொழுதுள்ள வரி விதிப்புகள் குறித்து கார்ப்பரேட் முதலாளிகளின் கருத்தை அறிந்து கொள்வது என்ற பெயரில் ஷோமேயின் தலைமையில் மற்றொரு கமிட்டியை (Tax Forum) அமைத்துள்ள மைய அரசு, இக்கமிட்டி வாரம் ஒருமுறை கார்ப்பரேட் நிறுவன அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை நடத்தும் என அறிவித்திருக்கிறது. மேலும், தகவல்-தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது விதிக்கும் வரிகளை மாற்றியமைக்கும் நோக்கத்தோடு ரங்காச்சாரி என்பவர் தலைமையில் மற்றொரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சட்டபூர்வ வரிச்சலுகைகளும் தள்ளுபடிகளும்தான் பட்ஜெட் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது என்பது மறைக்கப்பட்டு, இச்சலுகைகள் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானவை என நயவஞ்சகமான முறையில் நியாயப்படுத்தப்படுகிறது.

*2014-க்குள் இந்தியா திருப்பிச் செலுத்த வேண்டிய 17,200 கோடி அமெரிக்க டாலர்கள் பெறுமான அந்நியக் கடனில் 44 சதவீதம் டாடா, அம்பானி போன்ற தரகு முதலாளிகள் பெற்றுள்ள கடன் என்பதிலிருந்தே இந்தச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தியுள்ள அபாயத்தைப் புரிந்து கொள்ளலாம். சொல்லிக் கொள்ளப்பட்ட பொருளாதார வளர்ச்சி 2008-க்குப் பின் காணாமல் போய்விட்டது. ஆனால், இந்த வீக்கம் நாட்டைத் திவாலாக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது.*

*தனியார்மயம்-தாராளமயம் மட்டுமே இந்தியாவின் தொழிற் உற்பத்தியைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரித்து, நடப்புக் கணக்குப் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்க்கும் - என ஒளிவட்டம் போட்டுக் காட்டியது, ஆளுங்கும்பல். ஆனால், இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி தனியார்மயம்-தாராளமயம் படுதோல்வியடைந்துவிட்டதை மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது; இந்தியாவை அந்நிய மூலதனத்தின் அடிமையாக மாற்றியிருப்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறது.*

*உண்மை இவ்வாறிருக்க, மன்மோகன் சிங் கும்பலோ பொருளாதாரச் சீர்திருத்தங்கள் இன்னும் ஆழமாகவும் விரைவாகவும் அமல்படுத்தப்படாமல் தாமதம் ஆவதால்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகப் புளுகி வருகிறது. தனியார்மயம்-தாராளமயத்தை அதன் கடைகோடி எல்லைவரை அமல்படுத்திட வேண்டும் என்ற தமது நோக்கத்தைத் தடையின்றி ஈடேற்றிக் கொள்ளுவதற்கு இந்த நெருக்கடிகளைச் சாக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது.*

*1990-களின் தொடக்கத்தில் இந்தியா இதே போன்றதொரு நடப்புக் கணக்குப் பற்றாக்குறை நெருக்கடியில் சிக்கிக் கொண்டபொழுது, சர்வதேசதர நிர்ணய நிறுவனங்கள் இந்தியாவின் கடன் பெறும் தகுதியைக் குறைத்தன. இதனால் இந்தியா தனது கையிருப்பிலுள்ள தங்கத்தை அடகு வைத்துக் கடன் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இப்பொழுது அந்நிய நிதி நிறுவனங்கள் இந்தியப் பங்குச் சந்தையிலும் கடன் சந்தையிலும் கொட்டியிருந்த தமது மூலதனத்தைச் சுருட்டிக் கொண்டு அமெரிக்கா நோக்கிக் கிளம்பியதையடுத்து, டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிந்து விழுந்திருப்பதோடு, அந்நியச் செலாவணிக் கையிருப்பு நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. 1990-களில் ஏற்பட்ட நெருக்கடியைக் காட்டி தனியார்மயம்-தாராளமயத்தைத் தொடங்கி வைத்த மன்*

# “மீத்தேன் வாயுவை எடுக்கும் திட்டம்: மண்ணைக் காக்கக் கிளர்ந்தெழுவோம்!”

## - புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் 667 சதுர கி.மீ. பரப்பளவில் பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் மீத்தேன் வாயுவை அகழ்ந்தெடுப்பதற்காக 50-க்கும் மேற்பட்ட இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மைய அரசின் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் இம்மாவட்டங்களில் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலம் விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்டு, நிலத்தடி நீர்த் தொகுப்புகளும் உறிஞ்சி எடுக்கப்பட்டு, நஞ்சை செழிக்கும் இம்மாவட்டங்கள் பாலையாகிப் போகும் பேரபாயம் எழுந்துள்ளது. விவசாயிகளை விவசாயத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, நாட்டின் வளர்ச்சி என்ற பெயரில் திணிக்கப்படும் இப்பேரழிவுத் திட்டத்தை எதிர்த்து கடந்த ஜூன் மாதத்திலிருந்து தஞ்சை, நாகை, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, திருவாரூர், வேதாரண்யம் வட்டாரங்களில் பொது மக்கள் திரளும் இடங்களிலும் பேருந்துகளிலும் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தும் சுவரொட்டிகள் வாயிலாகவும் பிரச்சார இயக்கத்தை வி.வி.மு., பு.மா.இ.மு., ம.க.இ.க. ஆகிய புரட்சிகர அமைப்புகள் மேற்கொண்டன. அதன் தொடர்ச்சியாக 15.7.2013 அன்று மன்னார்குடி பேருந்து நிலையம் அருகே பெரியார் சிலை அருகில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

திருவாரூர் வட்டார வி.வி.மு. தோழர் பொன்னுசாமி தலைமையில் விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், பட்டுக்கோட்டை வட்டார வி.வி.மு. செயலாளர் தோழர் மாரிமுத்து, திருவாரூர் பு.மா.இ.மு. தோழர் ஆசாத் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, சிறப்புரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், டெல்டா மாவட்டங்களின் மண்ணையும் மக்களையும் நாசமாக்கும் இப்பேரழிவுத் திட்டத்தை விளக்கி, ஓட்டுக் கட்சித் துரோகிகளைப் புறக்கணித்து மண்ணைக் காக்க இம்மறுகாலனியாதிக்கத் தாக்குதலுக்கு எதிராகப் போராட அறைகூவினார்.

ஏற்கெனவே மைய அரசின் திட்டமாகிய கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் தொடக்கக் கட்டத்தில், நிபுணர் குழு அமைத்து ஆய்வு செய்வதாக நாடகமாடி, போராடும் மக்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது பாசிச ஜெயா கும்பல். அதேவழியில், இப்போது மீத்தேன் திட்டத்துக்கு எதிராக விவசாயிகளின் கண்டனங்களும் போராட்டங்களும் வலுக்கத் தொடங்கியதும், வல்லுநர் குழு அமைத்து விவசாயிகளின் கருத்தை அறிந்து மீத்தேன் வாயுவை எடுப்பது குறித்து ஆய்வு செய்யப் போவதாக மாய்மாலம் செய்கிறது. விவசாயிகளின் அதிருப்திக்கு வடிகால் வெட்டும் பாசிச ஜெயா கும்பலின் இப்பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தி இப்புரட்சிகர அமைப்புகள் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.



- பு.ஜ. செய்தியாளர், தஞ்சை.

*மோகன் சிங், இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் காட்டி அதனை இன்னும் தீவிரப்படுத்தும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.*

*தொலைபேசித் துறை, ஆயுதத் தளவாட உற்பத்தி, காப்பீடு, தேயிலைத் தோட்டங்கள், கூரியர் சேவை, கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு, விமானப் போக்குவரத்து, மின் சாரச் சந்தை, சிங்கிள் பிராண்டு சில்லறை வணிகம் உள்ளிட்டு 13 தொழில் மற்றும் சேவைத் துறைகளில் அந்நிய மூலதனம் புதிதாக நுழைய அல்லது ஏற்கெனவே உள்ள தமது மூலதனப் பங்கை அதிகரித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. காப்பீடு துறையில் 49 சதவீத அந்நிய முதலீட்டை அனுமதிக்க வேண்டும் என்றால், நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதை மன்மோகன் சிங் மயிரளவிற்குக்கூட மதிக்கவில்லை. ஆயுதத் தளவாட உற்பத்தியில் 26 சதவீத அந்நிய மூலதனம் மிக எளிதான வழியில் நுழைய அனுமதி அளிக்கப்பட்டிருப்பதற்குப் பரவலான எதிர்ப்புகள் எழுந்த பிறகும்கூட, தனது முடிவை மாற்றிக் கொள்ள காங்கிரசு கும்பல் தயாராக இல்லை. அத்துறையில் 26 சதவீதத்திற்கும் மேலான முதலீடுகளை அனுமதிப்பதைப் பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுதான் முடிவு செய்யும் என்ற அறிவிப்பெல்லாம் வெறும் பம்மாத்துதான்.*

*காங்கிரசின் இந்த முடிவு அந்நிய மூலதனம் நுழைய முடியாத தொழில் இனி எதுவுமே இந்தியாவில் கிடையாது என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது என்ற பெயரில் நாட்டின் வளங்களும் பொதுச் சொத்துகளும் பன்னாட்டு முதலாளிகளுக்குக் கைமாற்றிவிடப்படுகிறது. குடும்பச் சொத்தை ஒவ்வொன்றாக விற்று தின்று தீர்க்கும் தறுதலைக்கும் மன்மோகன் சிங்கின் இத்தனியார்மய நடவடிக்கைகளுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது.*

*இத்தனியார்மய நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையை அமெரிக்காவிடமும் ஏகாதிபத்திய முதலாளிகளிடமும் ஒப்புவிக்கின்றன. நாட்டின் கேந்திரமான செல்வ வளங்கள், தொழில்களைப் பன்னாட்டு முதலாளிகளின் கட்டுப்பாட்டில் விட்ட பிறகு, நாட்டின் சுதந்திரம், இறையாண்மை என்று பேசுவதில் ஏதாவது பொருளுண்டா?*

● செல்வம்

# இளவரசன் மரணம்:

# ‘சமூக நீதி’ அரசியலின் சாதிவெறி முகம்!

**வர்க்கப் போராட்டத்துக்கு மாற்றாக முன்நிறுத்தப்பட்ட ‘சமூகநீதி’ அரசியல், அரசு அதிகாரத்தோடு இணைந்து சாதிவெறியையும் தாக்குதலையும் தீவிரப்படுத்தியிருக்கிறது.**

**கொ**லையா தற்கொலையா என்பதுதான் மையமான கேள்வி என்கிற வகையில் சுருக்கப்படுகிறது இளவரசனின் மரணம் குறித்த பிரச்சினை. திவ்யாவின் தந்தை நாகராஜ் தற்கொலை செய்து கொண்டதன் விளைவாகத் தங்களுக்கு ஏற்பட்ட கோபத்தின் விளைவுதான் நத்தம் காலனி எரிப்பு என்று தங்கள் வெறியாட்டத்துக்கு பா.ம.க. சாதிவெறியர்கள் நியாயம் கற்பித்தது நினைவிருக்கிறதா?

அதே நியாயத்தினை இளவரசன் தற்கொலைக்கும் பொருத்தலாமல்லவா? இது தற்கொலை என்றே வைத்துக் கொண்டாலும், இளவரசனின் மரணம் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும், சாதி மறுப்பாளர்கள் மத்தியிலும் தோற்றுவித்திருக்கும் நியாயமான கோபத்துக்கு யாரைத் தீக்கிரையாக்குவது என்ற கேள்விக்கு சாதி வெறியர்கள் பதில் சொல்ல வேண்டும். இவ்வாறு கேட்பது பழிக்குப் பழி வாங்கும் எதிர்வினை அல்ல, தர்க்கரீதியாக எழும்பும் எதிர் வினா.

இது கொலையானாலும் தற்கொலையானாலும் அதனைத் தூண்டிய குற்றவாளிகள் பா.ம.க. சாதிவெறியர்கள்தான். ஆதிக்க சாதி பெண்களால் காதலிக்கப்படும் தலித் இளைஞர்கள் மிரட்டப்படுவதும், கொல்லப்படுவதும் தமிழகத்தில் வழமையாகி வருகிறது. நத்தம் காலனி எரிப்புக்குப் பின்னர், சேத்தியாதோப்பு கோபாலகிருஷ்ணன் என்ற தலித் இளைஞன் வன்னிய சாதிப் பெண்ணைக் காதலித்த குற்றத்துக்காக கண்டதுண்டமாக வெட்டிக்கொல்லப் பட்டான். பதிவுத் திருமணம் செய்து கொண்ட விமல்ராஜ் என்ற தலித் இளைஞனையும் செந்தமிழ்ச்செல்வி என்ற வன்னியப் பெண்ணையும் பிரிப்பதற்கு காடுவெட்டி குருவின் வக்கீல்கள் மேற்கொண்ட முயற்சியை, குடந்தையைச் சேர்ந்த சில வழக்குரைஞர்களும், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர் ராஜுவும் ஜெயங்கொண்டம் நீதிமன்றத்திற்கு நேரில் சென்று முறியடித்திருக்கின்றனர். இருப்பினும் உயிருக்குப் பயந்து விமல்ராஜும் செந்தமிழ்ச்செல்வியும் தலைமறைவாக வாழ்கின்றனர். இவையனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானதொரு சாதிவெறிப் பயங்கரவாத அச்சுறுத்தல் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதற்கான சான்றுகள்.

இளவரசனிடமிருந்து திவ்யாவைப் பிரிப்பதற்கு பா.ம.க. தலைமையைச் சேர்ந்த தருமபுரி டாக்டர் செந்தில், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் பாலு ஆகியோர் நேரடியாக ஈடுபட்டதும், ‘‘வன்னியப் பெண்ணைத் தொட்டால் வெட்டு’’ என்று காடுவெட்டி குரு பேசியதும் நாடறிந்த உண்மைகள். இருப்பினும் இளவரசன் மரணம் குறித்த புலன் விசாரணையை கொலை என்ற கோணத்தில் நடத்த மறுப்பது மட்டுமின்றி, தற்கொலைதான் என்ற பொதுக்கருத்தை உருவாக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டே காய் நகர்த்தி வருகிறது போலீசு.

சமீபத்தில் சென்னையில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில், இளவரசனின் வழக்குரைஞர்கள் சங்கர சுப்பு, ரஜினி மற்றும் இளவரசனின் பெற்றோர், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள், போலீசின் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்கையை அம்பலப்படுத்தியிருக்கின்றனர். எய்ம்ஸ் மருத்துவர்களின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னரே, தற்கொலைதான் என்று

இருப்புப் பாதை அருகே கிடக்கும் இளவரசனின் சடலத்தைக் கட்டியணைத்துக் கதறியழும் அவரது தாய் மற்றும் உறவினர்கள்; (உள்படம்) வன்னிய சாதிவெறிக்குப் பலியான இளவரசன்.





இளவரசனின் மண வாழ்க்கை முறிந்து போனதற்கும், அவர் சந்தேகத்திற்குரிய வகையில் இறந்து போனதற்கும் காரணமான குற்றவாளிகள்: ராமதாசு, அன்புமணி, காடுவெட்டி குரு மற்றும் பா.ம.க.வின் முன்னாள் எம்.எல்.ஏ. டாக்டர் செந்தில்

மருத்துவர்கள் கூறிவிட்டதாகப் பத்திரிகைகளுக்குச் செய்தியைக் கசிய விட்டது, இளவரசன் எழுதியதாக கூறப்படும் கடிதம் கைக்கு கிடைத்தவுடனேயே, ''இது தற்கொலைதான்'' என்று மாவட்ட எஸ்.பி. அஸ்ராகார்க் அறிவித்தது, இளவரசன் தற்கொலை செய்து கொள்ளும் மனநிலையில் இருந்தாரென்று அவரது நண்பர்களே வாக்குமூலம் அளித்துவிட்டதாக வதந்தி பரப்பியது போன்ற பல விவரங்களைக் கூறி, இந்தப் புலன் விசாரணையின் நம்பகத்தன்மையை அவர்கள் கேள்விக்குள்ளாக்கினர். ஆடிட்டர் ரமேசு கொலையைத் தொடர்ந்து, இந்து மதவெறியர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்துவரும் போலீசு, இளவரசன் மரணம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லவில்லை.

இளவரசன்-திவ்யா காதல் திருமணம் என்பது, வன்னிய மக்கள் மத்தியில் சாதிவெறியைக் கிளப்புவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஆதிக்க சாதியினரைத் திரட்டுவதற்கும் ராமதாசு பயன்படுத்திய துருப்புச்சீட்டு. நத்தம் காலனி எரிப்பு தொடங்கி, மரக்காணம் தாக்குதல், மாமல்லபுரம் சாதிவெறிக் கொண்டாட்டம், ராமதாசு கைதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் நடத்தப்பட்ட பொதுச்சொத்து அழிப்பு, அப்பாவிகள் கொலை, இளவரசனிடமிருந்து திவ்யாவைப் பிரித்தது, இறுதியாக இளவரசன் மரணம் போன்றவையனைத்தும் தனித்தனிக் குற்றங்கள் அல்ல. இவை ராமதாசு நடத்தி வரும் சாதிவெறி அரசியல் எனும் கொடும் குற்றத்தின் வெவ்வேறு விளைவுகள்.

குஜராத், அயோத்தி, மும்பை படுகொலைகைகளில் மோடி, அத்வானி, தாக்கரே ஆகியோரின் பாத்திரம் என்னவோ அதுதான் இளவரசன் கொலை, நத்தம் காலனி எரிப்பு மற்றும் மரக்காணம் தாக்குதலில் பா.ம.க. தலைமையின் பாத்திரம். இவர்கள்தான் முதன்மைக் குற்றவாளிகள். திவ்யாவின் தந்தை நாகராஜின் பிணத்தை வைத்துக் கொண்டு மூன்று கிராமங்களைச் சுடுகாடாக்கிய பா.ம.க. வின் கிரிமினல் நடவடிக்கை, கோத்ராவின் பிணங்களைக் காட்டி முஸ்லிம் மக்கள் மீது இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்ட மோடியின் குற்றத்திலிருந்து எந்த விதத்திலும் வேறுபட்டதல்ல. நியூட்டன் விதியைக் கூறி குஜராத் இனப்படுகொலையை நியாயப்படுத்திய நரமாமிச மோடிக்கும், நத்தம் காலனி சூறையாடலை நாகராஜின் மரணத்துக்கு எதிர்வினை என்று நியாயப்படுத்திய 'அன்பு' மணி வகையறாக்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. சிறுபான்மை தலித் மக்களுக்கு எதிராக வன்னியர்களை மட்டுமின்றி, பார்ப்பனர் உள்ளிட்ட எல்லா ஆதிக்க சாதிகளையும் அணிதிரட்டும் ராமதாசின் அயோக்கியத்தனம், சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு எதிராக இந்து பெரும்பான்மையைத் திரட்டும் இந்து வெறியர்களின் குற்றத்துக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல.

பா.ம.க.வின் வழக்குரைஞரும் வன்னிய சாதி வெறியனுமான பாலுவின் 'பாதுகாப்போடு' நீதிமன்றத்திலிருந்து வெளியே வரும் இளவரசனின் காதல் மனைவி திவ்யா



எனினும், இளவரசனின் மரணத்துக்குக் காரணமான முதல் குற்றவாளி ராமதாசு உள்ளிட்ட பா.ம.க. வின் தலைமையினர்தான் என்ற உண்மையை வேண்டுமென்றே பூசி மறைக்கிறது ஜெ அரசு. தன்னுடைய அரசு அதிகாரத்தின் மேலாண்மையை நிறுவும் பொருட்டு, பொதுச்சொத்துக்கு சேதம் போன்ற குற்றங்களுக்காக பா.ம.க. வினர் மீது வழக்குகளைப் போட்டிருக்கும் ஜெ.அரசு, அந்த நடவடிக்கைகளையே சாதிவெறிக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகச் சித்தரித்து தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்றுகிறது. ஆனால் உண்மை இதற்கு நேர் எதிரானது.

இளவரசன் மரணத்தையொட்டித் தாழ்த்தப்பட்ட மக்களும், சாதி மறுப்பாளர்களும் திரளுவதைத் தடுக்க திட்டமிட்டே தருமபுரி மாவட்டம் முழுதும் 144 தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது. திருமாவளவனுக்குத் தடை, தில்லியிலிருந்து வந்த எஸ்.சி - எஸ்.டி. கமிசனைச் சேர்ந்தோருக்கும் தடை, நத்தம் காலனிக்குள் நுழைவதற்கு ஆட்சியரின் அனுமதி பெறவேண்டும் என்ற உத்தரவு, அனைத்துக்கும் மேலாக இளவரசனும் திவ்யாவும் சேர்ந்து இருப்பது போன்ற புகைப்படங்கள் கொண்ட பானர்களை போலீசே முன்நின்று அகற்றியது போன்ற நடவடிக்கைகளின் மூலம், சட்டம் - ஒழுங்கின் பெயரால், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் சாதி மறுப்பாளர்களைத்தான் ஜெ.அரசு ஒடுக்கியிருக்கிறது.



எதிர்ப்புகளை மீறி மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒச்சம்மாளைக் காதல் திருமணம் செய்து கொண்டதால், கழுத்து அறுக்கப்பட்டும், ஆணுறுப்பு வெட்டப்பட்டும் கொல்லப்பட்ட பெரம்பலூர் - ஆலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இளைஞன் பார்த்திபன். (நன்றி: ஜூ.வி.)

இந்து முன்னணி வெள்ளையப்பன், பா.ஜ.க. ரமேசு ஆகியோரின் கொலை தொடர்பாக போலீசு மேற்கொண்டிருக்கும் அணுகுமுறையை இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். வெள்ளையப்பனின் உடலை ஊர் ஊராக கொண்டு செல்ல அனுமதிக்கப் படுகிறது. பா.ஜ.க. வின் அனைத்திந்தியத் தலைவர்கள் வரிசையாக வந்து இறங்கி மதவெறியைக் கக்குகின்றனர். கடையடைப்பு என்ற பெயரில் தமிழகமெங்கும் இந்து மதவெறியர்கள் காலித்தனம் செய்கின்றனர். ரமேஷ் கொல்லப்பட்டவுடனே இந்து மதவெறியர்களுக்கு ஆயுத போலீசு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அனைத்துக்கும் மேல், புலன் விசாரணை தொடங்கும்போதே கொலையாளிகள் இசுலாமியர்கள்தான் என்ற கருத்தை போலீசே உருவாக்குகிறது. இந்து மதவெறியர்களின் கோரிக்கைப்படி சிறப்புப் புலனாய்வுக் குழுவும் அமைக்கப்பட்டுவிட்டது.

அதேநேரத்தில் நத்தம் காலனி எரிப்பு வழக்கில் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு எதிர்க்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000 தரப்பட்டது. ''எரிந்த, திருடப்பட்ட பொருட்களின் மதிப்பான 7 கோடி ரூபாயைத் தமிழக அரசுதான் கொடுக்க வேண்டும்'' என்று மனித உரிமைப் பாதுகாப்பு மையம் தொடர்ந்த வழக்கில், உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 7 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது இளவரசன் மரணத்தை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்ற ம.உ.பா.மையத்தின் மனுவும் தமிழக அரசால் இழுத்தடிக்கப்படுகிறது.

அரசும் போலீசும் மட்டுமல்ல, உயர் நீதிமன்றமும் சட்ட விரோதமான முறையில் சாதி வெறியர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டிருக்கிறது. தன்னை யாரும் கடத்தவில்லை என்றும், தான் விருப்பப்பட்டுத்தான் இளவரசனை மணந்ததாகவும் திவ்யா தெளிவாகக் கூறிவிட்ட போதிலும், இளவரசன்-திவ்யா திருமணத்தை முன்வைத்து நவம்பர் 2012 முதல் தமிழகம் முழுவதும் பா.ம.க.வினர் அரங்கேற்றி வரும் சாதிவெறியாட்டங்கள் பற்றி தெரிந்திருந்த போதிலும், திவ்யாவை பா.ம.க.வினரின் பிடியில் ஒப்படைத்து அந்தப் பெண்ணை இளவரசனிடமிருந்து பிரிப்பதற்குத் துணை நின்றது உயர் நீதிமன்றம்.

தி.மு.க. உள்ளிட்ட ஓட்டுக்கட்சிகள் முதல் தமிழினவாத அமைப்புகள் வரையிலான அனைவரும் மிகவும் எச்சரிக்கையாக சம்பிரதாயக் கண்டனத்துடன் நிறுத்திக் கொண்டனர். வன்னியர்கள் மத்தியிலேயே வீழ்ச்சியடைந்து வரும் தனது செல்வாக்கை காப்பாற்றிக் கொள்வதற்கு ராமதாசு மேற்கொள்ளும் கீழ்த்தரமான முயற்சி என்று என்று திருமாவளவன் போன்றோர் இதனை விளக்குகின்றனர். அரசு எந்திரம், போலீசு, நீதிமன்றம், ஊடகங்கள் ஆகியவற்றின் ஆதிக்க சாதிச்சார்புக்கும், மற்ற ஓட்டுக் கட்சிகளின் மவுனத்துக்குமான விளக்கம் இதில் இல்லை.

எளிமையாகச் சொல்வதானால், வன்னிய சாதியில் பிறந்த அடிப்படை வர்க்கத்தைச் சேர்ந்த திவ்யா என்ற பெண், சாதியைத் தேவையற்றதாவும், நிராகரிக்க வேண்டியதாகவும் கருதியிருக்கிறாள். நத்தம் காலனியிலேயே அவளைப் போன்ற பல பெண்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களை மணந்து கொண்டு, அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். நத்தம் காலனி எரிப்புக்குப் பின்னரும்கூட செந்தமிழ்ச்செல்வியைப் போன்ற பெண்கள் வன்னியகுல சத்திரிய போதைக்கு ஆட்படவில்லை. மாறாக, அவர்கள் சாதியை நிராகரிக்கிறார்கள்.

''வழக்குரைஞர்கள் சமூகநீதிப் பேரவை'' வைத்திருக்கும் பா.ம.க. வின் வக்கீல் பாலுவுக்கும், டாக்டர்கள் ராமதாசு, அன்புமணி, செந்திலுக்கும், இன்னும் வன்னிய சாதியைச் சேர்ந்த பள்ளிக்கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி

வள்ளல்கள், கந்து வட்டிக்காரர்கள், காண்டிராக்டர்கள், அதிகார வர்க்கத்தினர், நீதிபதிகள், அறிவுஜீவிகள் ஆகியோருக்கும்தான் சாதி தேவைப்படுகிறது.

ஏற்கெனவே சமூகநீதியில் ஒரு ஆதிக்க சாதி என்ற முறையில் பெற்றிருக்கும் அதிகாரத்துடன், அரசியல் கட்சி, அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறை போன்றவற்றிலும் இத்தகைய இடைநிலைச்சாதிகளின் மேட்டுக்குடி வர்க்கங்கள் பெறுகின்ற அதிகாரம் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக மட்டுமின்றி, சொந்த சாதி உழைக்கும் மக்களுக்கும் எதிராக இருக்கிறது. அந்த வகையில் நாடாளுமன்ற அரசியல் சாதியைப் பாதுகாப்பதற்கான நிரந்தர ஏற்பாடாக ஆளும் வர்க்கத்திற்குப் பயன்படுகிறது.

வர்க்கப் போராட்டத்திற்கு மாற்றாகவும், சாதியை ஒழிக்கும் பொருட்டு இந்திய மண்ணுக்காகவே தயாரிக்கப்பட்ட வழிமுறையாகவும் முன்வைக்கப்பட்ட சமூக நீதி அரசியல் என்ற பெயரிலான சாதிய அடையாள அரசியல்தான் மக்கள் மத்தியில் மங்கி வரும் சாதி உணர்வை புளி போட்டு விளக்கிப் புதுப்பித்து, ''பல்லவனே வா, பாண்டியனே வா, சேரனே வா!'' என்று அரிவாள் எடுத்துக் கொடுக்கிறது.

பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை பற்றி பேசித் திரிந்த எல்லா சாதியப் பிழைப்புவாதிகளின் சாயமும் வெளுத்து விட்டது. மாயாவதி நடத்திய பார்ப்பனர்களின் சாதிச்சங்க பேரணிக்குப் போட்டியாக முலாயம் கட்சி பார்ப்பனப் பேரணி நடத்த முயற்சிக்க, சாதிச்சங்க பேரணி நடத்தக்கூடாது என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்க, ''சாதிப் பேரணி நடத்துவது ஜனநாயக உரிமை; சாதி இருக்கலாம், ஆதிக்கம்தான் இருக்க கூடாது'' என்று புதிய தமிழகம் கிருஷ்ணசாமி விளக்கமளிக்க, சாதி ஒழிப்பு கூடாது என்கின்ற ஆர்.எஸ்.எஸ். கொள்கையே சமூக நீதிக் கொள்கை என்பது விளக்கமாகியிருக்கிறது.

• அஜித்

## இளவரசன் மரணம்:

# தமிழகமெங்கும் சாதிவெறிக்கெதிராக...

இளவரசன் மரணம் குறித்த செய்தி வெளிவந்தவுடனேயே தருமபுரி மாவட்ட வி.வி.மு. தோழர்கள் அவரது உடல் கிடந்த இடத்துக்கு விரைந்தனர். தற்கொலை என்ற செய்தியை போலீசு பரப்பி வந்ததால் ரயில்நிலைய அதிகாரியை நேரில் விசாரித்தனர். எந்த ரயிலின் ஓட்டுனரும் தனக்குத் தகவல் தரவில்லை என்றும் காங்மேன் தான் இளவரசனின் உடலைப் பார்த்துவிட்டுத் தகவல் கொடுத்தாரென்றும் விசாரித்தறிந்து அதையும் இளவரசனின் தந்தை பேட்டியையும் வினவு தளம் மூலம் வெளிக் கொணர்ந்தனர்.

''ராமதாசு, அன்புமணி, காடுவெட்டிகுரு முதலான பா.ம.க. சாதி வெறியர்களை வன்கொடுமைக் கொலைக் குற்றத்தின் கீழ் கைது செய்! வன்னியர் சங்கத்தை உடனே தடைசெய்!'' என்ற முழக்கங்கள் கொண்ட சுவரொட்டிகள் தமிழகமெங்கும் ஒட்டப்பட்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ராமதாசு கொடும்பாவி எரிப்பு, மதுரை உயர்நீதிமன்றத்தில் ராமதாசு உருவப் படத்துக்குச் செருப்படி எனப் பல வடிவங்களில் போராட்டங்கள் நடந்தன. வன்னிய குல சத்திரியர் என்று கூறிக்கொண்டு பகிரங்கமாக சாதி வெறியைத் தூண்டிய போதிலும், வேறெந்த அமைப்பும் சாதி வெறியைப் பெயர் சொல்லிக் கண்டிக்கத் தயாராக இல்லை. ஆதிக்கசாதி மனோபாவத்துடன் சமரசம் செய்து கொண்டனர். இப்பிரச்சினையை நேருக்குநேர் எதிர்கொள்ளும் பொருட்டு சூலை 13 அன்று விருத்தாசலத்தில் அரங்கக் கூட்டம் நடத்தி பா.ம.க.வின் வன்னிய சாதிவெறி அம்பலப்படுத்தப்பட்டது. இந்த முழக்க சுவரொட்டிகள் தருமபுரியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சாதி மறுப்பாளர்களுக்கும் உத்வேகமூட்டின.

''திவ்யாவும் கொலை செய்யப்படுவதற்கான சாத்தியம் உள்ளதால், அவரது தாயாரையோ உறவினர்களையோ இயற்கையான காப்பாள

ரஜினி உள்ளிட்ட வழக்குரைஞர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நத்தம் காலனியில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம்.














ராகக் கருத இயலாது என்றும், திவ்யாவை அரசு பாதுகாப்பில் தங்கவைக்க வேண்டும், மனநல மருத்துவர்கள் திவ்யாவைச் சந்திக்க அனுப்ப வேண்டுமென்றும், இந்த வழக்கின் விசாரணையை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தது. திவ்யா போலீசிடம் ஒப்படைக்கப்பட்டார். சி.பி.ஐ. விசாரணை குறித்து நீதிமன்றம் முடிவு செய்யவில்லை.

இப்பிரச்சினையில் ''மறு பிரேதப் பரிசோதனை தேவையில்லை என்றும் தலைவர்களை அஞ்சலி செலுத்த அனுமதித்தால் அடக்கம் செய்து விடலாம்'' என்றும் விடுதலைச் சிறுத்தைகள் தன்னிச்சையாக ஊடகங்களுக்கு அறிவித்ததன் விளைவாக நத்தம் காலனி மக்கள் ஆத்திரம் கொண்டனர். விடுதலைச் சிறுத்தைகளின் சமரசத்தை வி.வி.மு. தோழர்கள் அம்பலப்படுத்தினர். வழக்குரைஞர் ரஜனியும் இளவரசனின் தந்தையும் வி.சி.யின் கருத்தை மறுத்து ஊடகங்களுக்குப் பேட்டியளித்தனர். தொடர்ந்து இளவரசனின் அண்ணன் வி.சி. யினரை ஒதுங்கிக் கொள்ளுமாறு கூறியதும் ஊடகங்களில் அம்பலமானது.

வி.வி.மு., மார்க்சிஸ்டு கட்சியினர், முன்னாள் மா-லெ அமைப்பினர் ஆகியோரும் ஊர் மக்களும் இணைந்து பிரச்சினைகளைக் கையாளத் தொடங்கவே, போலீசு நக்சல் பீதியைக் கிளப்பியது. திவ்யாவை கடத்த நக்சல் சதி என தமிழ் முரசு செய்தி வெளியிட்டது. தொடர்ந்து ரஜினி உள்ளிட்ட வழக்குரைஞர்கள் கைது செய்யப்பட்டனர். வழக்குரைஞர்கள் கைதை எதிர்த்து நத்தம் காலனியில் உண்ணாவிரதம் தொடங்கியது. அனுமதிக்க முடியாது என்று போலீசு சொன்னவுடன் மக்கள் ஆத்திரம் கொண்டனர். போலீசு பின்வாங்கியது. இறுதியாக இளவரசனின் உடல் அடக்கம் செய்யப்படும் வரை ஏறத்தாழ பத்து நாட்கள் தோழர்கள் அம்மக்களுடன் இருந்தார்கள். இனியும் இருப்பார்கள். நத்தம் காலனி எரிப்பில் தொடங்கி இளவரசன் மரணத்தில் முடிந்திருக்கும் இந்தச் சாதிவெறியாட்டம், புரட்சிகர அமைப்புகளின் பொறுப்பை மேலும் அதிகரித்திருக்கிறது.

– பு.ஜ.செய்தியாளர்கள்.

## வருண் காந்தி மீதான வழக்குகள் ரத்து:

# முலயம் சிங்கின் முகத்திரை கிழிந்தது!

''இது கை அல்ல. தாமரையின் சக்தி. முசுலிம்களின் தலைகளை வெட்டி எறியும்'' என்றும், ''இந்துவுக்கு எதிராக எவனாவது கையை உயர்த்தினால், கீதை மீது ஆணையாக அந்தக் கையை வருண் வெட்டுவான்'' என்றும் 2009 மக்களவைத் தேர்தலில் உ.பி.யின் பிலிபித் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராகப் போட்டியிட்ட வருண்காந்தி மேடைதோறும் பேசியதை நாடெங்கும் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. கோடிக்கணக்கான மக்கள் அதனைப் பார்த்தார்கள். அந்தத் தேர்தலில் வருண் காந்தி வெற்றியும் பெற்றார்.

இம்மதவெறிப் பேச்சுக்காக அன்றைய உ.பி. அரசு வருண் காந்தி மீது இரண்டு வழக்குகளைப் பதிவு செய்தது. தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரி வருண்காந்தி தாக்கல் செய்த மனுவையும் அலகாபாத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உடனே பர்க்கரோ நீதிமன்றத்தில் சரணடையப் போவதாகக் கூறி, மதவெறிக் காலிகளின் படையைத் திரட்டிக் கொண்டு வருண் காந்தி நடத்திய பேரணி, தீவைப்பிலும் கல்வீச்சிலும் முடிந்தது. 25 பேர் படுகாயமடைந்தனர். இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மற்றுமொரு வழக்கும் பதிவானது.

நாடறிய இழைக்கப்பட்ட இந்தக் குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்று வருண் காந்தி பிலிபித் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருக்கிறார். சட்டத்தின் ஆட்சியைப் பற்றியும், நீதித்துறையின் சுயேச்சைத் தன்மையைப் பற்றியும் பேசுவோர் இவ்வழக்கின் விசாரணை எப்படி நடைபெற்றது என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம்.

நீதித்துறை வரலாற்றிலேயே முதன்முறையாக அனைத்து சாட்சியங்களும் ஒரே நாளில் பதிவுசெய்யப்பட்டன. சிலரது வாக்குமூலங்களை வருணுக்குச் சாதகமாக அரசு வழக்குரைஞர்களே மாற்றி எழுதினார்கள். நீதிபதி நீதிமன்றத்தில் இல்லாத நிலையிலும் சில சாட்சியங்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. நீதிபதிகள் இரண்டே நாட்களில் பதினெட்டு சாட்சியங்களை ஆய்வு செய்திருக்கின்றனர். சில சாட்சிகள் மாற்றுக் கருத்துகளைச் சொன்னபோதும் அரசு வழக்குரைஞரோ, நீதிமன்றமோ அவற்றைப் பொருட்படுத்தவேயில்லை.

வருணின் பாதுகாப்புக்குத் தலைமைவகித்த போலீசு அதிகாரி, வருண் பேசியதாகக் கூறப்படும் பேச்சு எதையும் தாம் கேட்கவில்லை என்று கூறினார். போலீசும் அரசு வழக்குரைஞர்களும் மிரட்டியிருந்ததால், சாட்சிகள் அனைவருமே விசாரணையின் போது பிறழ்சாட்சியம் அளித்தனர். ஒரு வழக்கில் சாட்சிகள் அனைவருமே பிறழ் சாட்சியம் தந்தால் அவ்வழக்கை மறுபடியும் விசாரித்தாக வேண்டும் என நூற்றுக்கணக்கான முன்னுதாரணத் தீர்ப்புகள் இருந்த போதிலும், இவ்வழக்கை மீண்டும் விசாரித்திட நீதிபதி உத்தரவிடவில்லை.



வருண் காந்தி

வருண் பேச்சின் ஒலிப்பதிவை ஆய்வு செய்த அதிகாரி நீதிமன்றம் வந்து சாட்சி சொல்லத் தேவையில்லை என்று வழக்கை நடத்திய அரசுத் தரப்பே கோரியது. வழக்கின் முக்கிய ஆதாரமான குரல்மாதிரியைக் கொடுக்க முடியாது என்று வருண் காந்தி மறுத்தார். அனைத்தையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இந்த வழக்கில் பிறழ் சாட்சியம் அளித்தவர்களை ''தெகல்கா'' பத்திரிகை பேட்டி எடுத்திருக்கிறது. சாட்சியங்களை மாற்றிச் சொல்லும்படி பிலிபித் போலீசு அதிகாரி அமித் வர்மாவாலும் பிற அதிகாரிகளாலும் தாங்கள் மிரட்டப்பட்டதையும் தங்களுக்கு இலஞ்சம் தரப்பட்டதையும் பெரும்பான்மையான சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். இவையனைத்தையும் தெகல்கா ரகசிய கேமிராக்களில் பதிவு செய்திருக்கிறது.

பாரதிய ஜனதா ஆட்சியில் இருந்தால் செய்யக்கூடிய எல்லா விதமான கிரிமினல் வேலைகளையும் செய்து வருண் காந்திக்கு விடுதலை பெற்றுத் தரும் சாதனையைச் செய்திருப்பது முஸ்லிம்களின் காவலனாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ளும் சமாஜ்வாதி கட்சியின் அரசுதான். 2012-இல் ஆட்சிக்கு வந்தவுடனேயே, இவ்வழக்கைத் திரும்பப் பெறுவதற்கு சமாஜ்வாதி அரசு முயன்றிருக்கிறது. முஸ்லிம் அமைப்புகள் கடுமையாக எதிர்த்ததால், வழக்கை நடத்துவதாகப் போக்குக் காட்டி ஊத்தி மூடியிருக்கிறது.

மதச்சார்பின்மை சவடாலை வைத்து முஸ்லிம்களை ஏய்த்து வரும் ஒரு கட்சி, நீதித்துறை, போலீசு, அதிகாரிகள் உள்ளிட்ட அரசமைப்பு முழுவதையும் வருண்காந்தி என்ற ஒரு தரங்கெட்ட பொறுக்கியாலேயே விலை பேச முடியும் போது, கொலைகாரன் மோடி பிரதமர் நாற்காலியை நம்பிக் கையுடன் குறி வைப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

• அன்பு

## ஆடிட்டர் ரமேஷ் படுகொலை:

# செத்தவனெல்லாம் உத்தமன் அல்ல!

**விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே, திட்டமிட்டே முஸ்லிம்களுக்கு எதிரான பொதுக்கருத்தை அரசும் ஊடகங்களும் உருவாக்கி வருகின்றன.**

சேலத்தில் கடந்த ஜூலை 19-ஆம் தேதி பா.ஜ.க.வின் மாநிலப் பொதுச் செயலாளரான ஆடிட்டர் ரமேஷ் மர்ம நபர்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தி, இக்கொலைக்கு முஸ்லிம் தீவிரவாதிகளே காரணம் என்று இந்துவெறியைக் கிளறிவிட்டுப் பெருங்கூச்சல் போடுகின்றன இந்துத்துவ பரிவாரங்கள். ரமேஷ் கொலை மட்டுமின்றி, கடந்த ஈராண்டுகளாகத் தங்களது தலைவர்களையும் பிரமுகர்களையும் இசுலாமிய கூலிப் படையினர் குறிவைத்துக் கொன்று வருவதாகப் பட்டியலிடும் இக்கும்பலின் கோயபல்சு பிரச்சாரத்துக்குப் பக்கமேளம் வாசித்து, மரண பீதியில் இந்து தலைவர்கள் தவிப்பதாக கிசுகிசு பத்திரிகைகள் பீதியூட்டுகின்றன.

வீட்டுமனை, கந்துவட்டி, சினிமா, சாராயம், காண்டிராக்ட், கட்டப் பஞ்சாயத்து போன்ற பணம் கொழிக்கும் தொழில்களை நாடெங்கும் அனைத்து ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களும் நடத்தி வருகின்றனர். இவை தவிர கிரானைட், மணற்கொள்ளை போன்ற பொதுச் சொத்துக்களைச் சூறையாடுவதிலிருந்து, தனிநபர்களின் நிலங்களையும் சொத்துக்களையும் அபகரிப்பது வரை புதிய பொருளாதாரக் கொள்கையால் கொழுத்துவரும் தரகு முதலாளிகள் - நிலப்பிரபுகளின் கூட்டாளிகளாக இருந்து பொறுக்கித் தின்னும் கும்பல்களாக ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களும் தலைவர்களும் சீரழிந்துள்ளனர். இந்துத்துவ பரிவாரங்கள் ஆளும் குஜராத்திலே 49 எம்.எல்.ஏ.க்கள் கிரிமினல்களாக அம்பலப்பட்டுள்ளனர். நாடெங்கும் மாஃபியாக்களும் கூலிப் படைகளும் வளர்ந்துள்ளதோடு, பல்லாயிரம் கோடிகள் புழங்கும் இத்தொழில்களில் ஏற்படும் மோதல்கள் படுகொலைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்படுகின்றன.



பிணத்தைக் காட்டி தூண்டப்படும் இந்துவெறி: மர்ம நபர்களால் கொல்லப்பட்ட பா.ஜ.க. மாநிலப் பொதுச் செயலாளர் ஆடிட்டர் ரமேஷ்.

இந்துவெறிக் கும்பல் ஆற்றியுள்ள 'ஜனநாயகக் கடமை': ரமேஷ் கொலையையொட்டி நடத்தப்பட்ட கடையடைப்புப் போராட்டத்தின் போது நொறுக்கப்பட்ட பேருந்து.



இவ்வாறு இரகசிய உலகமும் ஓட்டுக்கட்சி அரசியலும் பின்னிப் பிணைந்துள்ள நிலையில், தமிழகத்தில் கடந்த இரண்டாண்டுகளில் பல்வேறு ஓட்டுக்கட்சிகளைச் சேர்ந்த 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு சில கொலைகளைத் தவிர பிற அனைத்துக்கும் அரசியல் காரணங்களோ, மதரீதியான காரணங்களோ இல்லை என்பதும் போலீசு விசாரணையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மக்களின் பொதுப்புத்தியில் திணிக்கப்பட்டுள்ள முஸ்லிம் எதிர்ப்பைக் கிளறிவிட்டு, இக்கொலைகளை வைத்து இந்துவெறி பரிவாரங்கள் ஆதாயமடையத் துடிக்கின்றன. இதன்படியே, ரமேஷ் கொலையையொட்டி நடத்தப்பட்ட கடையடைப்புப் போராட்டத்தின் போது பேருந்துகள் மீதான தாக்குதலும், வேலூரில் முஸ்லிம்களை ஆத்திரமூட்டும் சுவரொட்டிப் பிரச்சாரமும், கோவை துடியலூரில் மசூதி மீது பெட்ரோல் குண்டு வீச்சுத் தாக்குதலும் இந்துவெறியர்களால் அரங்கேற்றப்பட்டுள்ளன.

பா.ஜ.க. மாநில மருத்துவ அணிச் செயலாளரான டாக்டர் அரவிந்த் ரெட்டியின் கொலைக்குக் காரணம் பணம் - பெண் விவகாரம். நாகப்பட்டினம் புகழேந்தி கட்டப்பஞ்சாயத்து அடாவடிகளில் ஈடுபட்டு வந்த ஒரு ரவுடி. பரமக்குடி பா.ஜ.க. கவுன்சிலர் முருகன்,

பரமக்குடி நகர பா.ஜ.க. செயலாளர் தேங்காய்கடை முருகன் ஆகியோரின் கொலைகளுக்குக் காரணம் நிலத்தகராறு. சென்னை கோயம்பேட்டில் கந்து வட்டித் தொழில் நடத்தி வந்த விட்டல் என்ற பா.ஜ.க. பிரமுகர், கடன்வாங்கியவரது வீட்டிலுள்ள பெண்களை ஆபாசமாகத் திட்டியதாலேயே கடந்த ஆண்டு ஏப்ரலில் கொல்லப்பட்டார். இக்கொலைகளையொட்டி, கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே இந்துக்கள்தான். ஆடிட்டர் ரமேஷ் யாரால், எதற்காகக் கொல்லப்பட்டார் என்பதற்கான தடயமும், அவரது தீவிர ஆதரவாளராகச் சித்தரிக்கப்படும் பா.ஜ.க. மாநிலத் தலைமைச் செயற்குழு உறுப்பினரான ராஜராஜேஸ்வரி மறுநாள் தீக்குளித்து மாண்டதற்கான காரணமும் இன்னும் தெரியவில்லை.

ஆடிட்டர் ரமேஷ் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை என்று ஒருபுறம் கூறும் போலீசு, மறுபுறம் அத்வானி மதுரைக்கு வந்த போது பைப் வெடிகுண்டு வைக்க முயன்றதாகச் சொல்லப்படும் தலைமறைவு முஸ்லிம் குற்றவாளிகளைத் தேடுவதாகவும், அவர்களைப் பற்றி தகவல் கொடுத்தால் பரிசு வழங்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இக்கொலை வழக்கை சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து விசாரிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு முக்கியத்துவமளிக்கிறார். விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே மொத்த சந்தேகத்தையும் முஸ்லிம்கள் மீது திருப்பிவிட்டு, திட்டமிட்டே முஸ்லிம்களுக்கு எதிரான பொதுக்கருத்தை அரசும் ஊடகங்களும் உருவாக்கி வருகின்றன.

தமிழகத் தேர்தல் அரசியல் கூட்டணிகளில் இடம்பெற வழியில்லாமல் உள்ள இந்துவெறி பா.ஜ.க., மக்களிடையே இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு தமிழகத்தில் காலூன்றும் நோக்கத்துடனேயே இத்தகைய கொலைகளைக் காட்டி, கொல்லப்பட்டவர்களை இந்துக்களின் தலைவர்களாகவும் தேசத்துக்காக உழைத்த மாபெரும் தியாகிகளாகவும் சித்தரித்து, மற்ற ஓட்டுக் கட்சிகளுக்கு இல்லாத தனிச்சிறப்பான அடையாளமாகவும், தங்களை இந்துக்களின் பிரதிநிதிகளாகவும் காட்டிக் கொள்கிறது. இந்துவெறி கும்பலின் இச்சதியை அம்பலப்படுத்த முன்வராமல், தமிழகத்தில் கொலைகள் பெருகி வருவதாக ஓட்டுக்கட்சிகள் அறிக்கை வாசிக்கின்றன. இந்துவெறி பாசிசப் பரிவாரங்களின் முழு அடைப்பு போராட்டத்துக்கு வன்னிய சாதிவெறிக் கட்சியான பா.ம.க. ஆதரவு தெரிவித்து, சாதி-மதவெறி அணிதிரட்டலை முன்தள்ளுகிறது. பெரியார் பிறந்த மண்ணில் காலூன்றத் துடிக்கும் இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளின், சாதிவெறியர்களின் சூழ்ச்சிகள்- சதிகளை விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி முறியடிப்பதே இன்றைய அவசர அவசியக் கடமையாகியுள்ளது.

● மனோகரன்

# தனியார் பள்ளி முதலாளியைப் பணியவைத்த பெற்றோர்களின் போராட்டம்!

கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு, பூதங்குடி, வடலூர், சோழத்தரம் ஆகிய ஊர்களில் கிளைகளைக் கொண்டு இயங்கிவரும் எஸ்.டி. சியோன் மெட்ரிக் பள்ளியில், அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக வசூலித்துக் கொள்ளையடிக்கின்றனர். இதை எதிர்த்து வாதிடும் பெற்றோரிடம் உங்கள் குழந்தைக்கு ''டி.சி.'' கொடுத்து பள்ளியிலிருந்து வெளியேற்றிவிடுவோம் என்று மிரட்டி வருகின்றனர். இதைவிட, இப்பள்ளி முதலாளி பெற்றோர்களை கீழ்த்தரமான சொற்களால் இழிவுபடுத்துவது கொடுமையானது.

இதை எதிர்த்து மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்தினர், அரசு நிர்ணயித்துள்ள கட்டண விபரத்தை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு பள்ளியைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் விநியோகித்து பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதைக் கண்டு ஆத்திரமடைந்த பள்ளி முதலாளி போலீசைக் கொண்டு பெற்றோர் சங்கத்தின் அமைப்பாளர் பாலு மகேந்திரனை மிரட்டியும் கூட இப்பிரச்சாரம் ஓயவில்லை. பின்னர் 28.6.2013 அன்று சேத்தியாத்தோப்பில் பெற்றோர்களைத் திரட்டி அரங்கக் கூட்டம் நடத்திய இச்சங்கத்தினர், கல்வித் துறையின் கையாலாகாத்தனமும், தனியார் பள்ளி முதலாளியின் பணபலமும், அதிகார பலமும், அடியாள் பலமும்தான் இப்பகற்கொள்ளைக்கு முக்கிய காரணம் என்பதை விளக்கி, தொடர்ந்து உறுதியுடன் போராடாமல் இதை முறியடிக்க முடியாது என்பதை உணர்த்தினர். அரசு கட்டணத்தை மட்டுமே செலுத்துவது, இதற்கு போலீசின் பாதுகாப்பைக் கோருவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



இதன்படி 1.7.2013 அன்று ''அரசு கட்டணத்தை மட்டுமே செலுத்துவோம்!'' என்ற முழக்க அட்டையைக் கையிலேந்தியபடியே பள்ளியில் திரண்டிருந்தோரிடம் பெற்றோர்கள் பிரச்சாரம் செய்தபடியே அரசு தீர்மானித்த கட்டணத்தைச் செலுத்தினர். அதை வாங்க மறுத்து அடாவடி செய்த பள்ளி நிர்வாகத்தைப் பணியவைத்து முறைப்படி ரசீதும் பெற்றனர். ஏற்கெனவே சிதம்பரம் வீனஸ் மெட்ரிக் பள்ளியின் கட்டணக் கொள்ளைக்கு எதிரான போராட்டத்தின் தாக்கத்தால் மக்களின் பொதுக்கருத்து வலுவாக உள்ளதைப் புரிந்து கொண்ட போலீசு, வேறுவழியின்றி பாதுகாப்புக்கு நின்றது. கட்டணக் கொள்ளைக்கு எதிரான பெற்றோர்களின் உறுதியான போராட்டமும் இம்முதற்கட்ட வெற்றியும், இவ்வட்டாரமெங்கும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

- பு.ஜ. செய்தியாளர், சேத்தியாத்தோப்பு.

## என்.எல்.சி. பங்கு விற்பனை:

# ஜெயலலிதாவின் நரித்தனம்!

**ஜெயாவின் திடீர் ஈழத்தாய் அவதாரம் போல அவரது தனியார்மய எதிர்ப்பும் மோசடியானதுதான்.**

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பது தொடர்பான விவகாரம் தற்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளது. தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், மத்திய அரசு விற்கவுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் (என்.எல்.சி.) 3.6 சதவீதப் பங்குகளை ரூ. 500 கோடிக்கு வாங்கலாம் என்று இந்தியப் பங்குகள் பரிவர்த்தனை வாரியம் (செபி) ஒப்புதல் அளித்துள்ளது. அதைத் தொடர்ந்து 13 நாட்களாக வேலைநிறுத்தம் செய்து வந்த என்.எல்.சி. தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் 2012-13 ஆம் ஆண்டுக்கான நிகர லாபம் ரூ. 1,479 கோடி. இது சென்ற ஆண்டைவிட 3.5 சதவீதம் அதிகம். அப்படியிருந்தும் மைய அரசு ஏன் பங்குகளை விற்க வேண்டும்?

தொழில் நிறுவனங்களை அரசு நடத்தக்கூடாது; அனைத்தையும் சந்தைகளின் கட்டுப்பாட்டில் விட்டுவிட வேண்டும் - என்பதுதான் தனியார்மயக் கொள்கையின் தாரக மந்திரம். இதன்படி, நரசிம்மராவ் ஆட்சிக் காலத்திலிருந்து அடுத்தடுத்து வந்த ஆட்சிகள் அனைத்தும் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நாட்டின் சொத்துக்களையும் அரசுத்துறை நிறுவனங்களையும் அடிமாட்டு விலைக்கு தனியார் முதலாளிகளுக்குத் தாரைவார்த்தன. இதன் ஒரு பகுதியாக ஏற்கெனவே என்.எல்.சி. நிறுவனத்தின் 6.44 சதவீதப் பங்குகள், பங்குச்சந்தையில் விற்கப்பட்டு பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாக்கப்பட்டது.



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பதை எதிர்த்து நடந்த தொழிலாளர்களின் போராட்டம்.

ஊழல் அரசியல்வாதிகள்தான் நாட்டின் வறுமைக்கும் பின்தங்கிய நிலைக்கும் காரணம்; எனவே தொழில் நிறுவனங்களையும் அவற்றின் சந்தை வர்த்தக நடவடிக்கைகளையும் நாடாளுமன்றமோ, அரசாங்கமோ கட்டுப்படுத்தும் பொறுப்பில் இருக்கக் கூடாது; மாறாக தகுதியான, நேர்மையான, நிர்வாக நுணுக்கங்களை அறிந்துள்ள அதிகார வர்க்க நிபுணர்களிடம், துறை சார்ந்த வல்லுநர்களிடம் அதிகாரத்தை அளிப்பதன் மூலம்தான் வளர்ச்சியைச் சாதிக்க முடியும் - என்பதுதான் புதிய தாராளமயக் கொள்கையின் அடிப்படை விதி. இதன்படி, மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் - என அடுத்தடுத்து உருவாக்கப்பட்ட இத்தகைய அமைப்புகள் அனைத்தும் ஏற்கெனவே பெயரளவில் இருந்த அரசாங்கக் கண்காணிப்புகளை ஒழித்துக்கட்டி, முழுவதும் தனியார் முதலாளிகளின் சூறையாடலுக்கு ஏற்ப இயங்க ஆரம்பித்தன. இந்த ஒழுங்குமுறை ஆணையங்களும் வாரியங்களும் தீர்மானிக்கும் விதிகளைத்தான் யார் பிரதமராக இருந்தாலும், எந்தக் கூட்டணி அரசாங்கமாக இருந்தாலும் பின்பற்ற வேண்டும்; அதை எதிர்க்கவோ, மீறவோ கூடாது என்பதே எழுதப்படாத சட்டமாகியது.

குடிநீர் விநியோகம், குப்பைகளையும் கழிவுகளையும் அகற்றுதல், மின்சாரம், விவசாயம், கல்வி, தொழில் - என அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் இத்தகைய வல்லுநர்களிடமும் தொழில்முறை அமைப்புகளிடம் விடப்படுகின்றன. பங்குச் சந்தை மோசடிகள் புழுத்துப் போனபோது, பங்குச்சந்தையைக் கண்காணிக்க ஏற்கெனவே இந்தியப் பங்குகள் பரிவர்த்தனை வாரியத்தை (செபி) அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தும் சூப்பர்

அரசாங்கமாக இத்தகைய ஆணையங்களும் வாரியங்களும் நிபுணர் குழுக்களும் திணிக்கப்பட்டு, அம்மணமான கார்ப்பரேட் அதிகார வர்க்கத்தின் ஆட்சியை புதிய தாராளமயக் கொள்கை நிறுவி வருகிறது.

இதன்படி, பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பொதுமக்களின் (அதாவது தனியார் முதலாளிகளின்) பங்கு மூலதனம் கட்டாயம் இருந்தாக வேண்டும்; தனியார் நிறுவனங்களில் 25 சதவீத அளவுக்கும், பொதுத்துறை நிறுவனங்களில் 10 சதவீத அளவுக்கும் இருக்க வேண்டும் - என மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்தியப் பங்குகள் பரிவர்த்தனை வாரியம் (செபி) நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனையை வரும் ஆகஸ்ட் 8-ஆம் தேதிக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று கெடு விதித்தது. அதை நிறைவேற்றாவிட்டால் ஏதோ உலகமே அழிந்துவிடப் போவதைப் போல அரசும் ஊடகங்களும் பரபரப்பூட்டின. ஆனால் ஏராளமான மக்கள் நலத் திட்டங்கள் கெடு விதிக்கப்பட்டும்கூட நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்படுவதைப் பற்றி இவை வாய் திறப்பதில்லை.

> **என்.எல்.சி.யின் பங்குகளை வாங்கும் தமிழக அரசுத்துறை நிறுவனங்கள் அவற்றைப் பங்குச் சந்தையில் விற்க எந்தத் தடையும் கிடையாது. எனவே, அவை தனியார் முதலாளிகளின் கைகளுக்குப் போகாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.**



பொதுமக்களின் பங்கு மூலதனம் 10 சதவீதத்தில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பது நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் மட்டுமல்ல. செபி விதித்துள்ள நிபந்தனையால் 12 பொதுத்துறை நிறுவனங்களும் இதே சிக்கலில் உள்ளன. நடப்பு நிதியாண்டில் ஏறத்தாழ 5 லட்சத்து 28 ஆயிரத்து 163 கோடிகளை தனியார் முதலாளிகளுக்கு வரிச்சலுகையாக அள்ளிக் கொடுத்துள்ள மைய அரசு, வெறும் 466 கோடிகளைத் திரட்டுவதற்காக என்.எல்.சி.யின் பங்குகளை தனியாரிடம் விற்கத் துடிப்பதிலிருந்தே ஆட்சியாளர்களின் தனியார்மயமாக்க வெறியைப் புரிந்து கொள்ள முடியும். இப்படித்தான் மாருதி நிறுவனத்தில் 50 சதவீதப் பங்குகளைக் கொண்டிருந்த இந்திய அரசு, பா.ஜ.க. ஆட்சியின்போது எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாத போதிலும் பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்கிறோம் என்ற பெயரில் ஜப்பானிய ஏகபோக சுசுகி நிறுவனத்திடம் விற்றது. இப்போது முழுக்கவும் சுசுகியின் ஆதிக்கப் பிடிக்குள் மாருதி சென்றுவிட்டது.

தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக என்.எல்.சி.யின் பங்குகளை பங்குச் சந்தையில் விற்கும் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் மைய அரசு கையைப் பிசைந்து கொண்டிருந்த நிலையில், எதிர்ப்புகளைச் சமாளிக்க இப்பங்குகளை தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் வாங்கிக் கொள்ளும் திட்டத்தை நயவஞ்சகத் தந்திரத்துடன் ஜெயலலிதா முன்வைத்துள்ளார். இதன்படி, என்.எல்.சி.யின் பங்குகளை வாங்கும் தமிழக அரசுத்துறை நிறுவனங்கள் அவற்றைப் பங்குச் சந்தையில் விற்கவோ, ஒரு ஆண்டுக்குப் பிறகு வேறு ஒரு கார்ப்பரேட் நிறுவனத்துக்கு விற்கவோ எந்தத் தடையும் கிடையாது. இதை என்.எல்.சி. நிர்வாகம் கண்காணிக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. எனவே, தற்போது பங்குகளை தமிழக அரசுத்துறை நிறுவனங்கள் வாங்கியிருந்தாலும், அவை தனியார் முதலாளிகளின் கைகளுக்குப் போகாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. நாளையே தமிழக அரசுக்கு நிதிப் பற்றாக்குறை என்று காரணம் காட்டி, இந்தப் பங்குகளை ஜெயலலிதா விற்பனை செய்தால் அதை யாரும் தடுக்கவும் முடியாது.

ஏற்கெனவே தமிழக காகித ஆலை நிறுவனத்தின் (டி.என்.பி.எல்.) பங்குகளை தனியாருக்குத் தாரை வார்த்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதா, நாடாளுமன்றத் தேர்தல் வருவதால், அரசியல் ஆதாயத்துக்காகவே இப்படி சூரத்தனம் காட்டுகிறார். இம்மோசடியை மூடிமறைத்து, "எனது தலைமையிலான அரசின் தொடர் நடவடிக்கையாலும், எனது தனிப்பட்ட முயற்சியாலும் என்.எல்.சி. பங்குகள் தனியாருக்கு விற்பனை செய்வது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இது தொழிலாளர் போராட்டத்துக்கும் தமிழக மக்களின் ஒருமித்த குரலுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி" என்று தனக்குத்தானே பாராட்டிக் கொள்கிறார். அதற்கு ஆமாம் சாமி போட்டு, செபி போன்ற ஆணையங்களின் - நிபுணர் குழுக்களின் உத்தரவுகளை மீற முடியாது என்று கார்ப்பரேட் பகற்கொள்ளைக்குப் பக்கமேளம் வாசிக்கின்றன பார்ப்பன ஊடகங்கள். இம்மறுகாலனியாதிக்கச் சதியைத் திரைகிழித்து, தனியார்மய-தாராளமயத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதே போராடும் மக்களின் இன்றைய மையக் கடமையாகியுள்ளது.

● குமார்

### அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் போராட்டம்:

# வரலாற்றில் இடம் பிடிக்கிறார் வீரமணி!

‘‘அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்க வேண்டும்’’ என்ற கோரிக்கை தமிழர் தலைவர் வீரமணிக்கு நினைவுக்கு வந்துவிட்டது. ஆகஸ்டு 1 அன்று ஆர்ப்பாட்டம், பிறகு மாநாடு, மறியல் என்று தடபுடலாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்திகளையெல்லாம் படித்து விட்டு, ‘‘ஊர் கூடி தேர் இழுத்தால் நல்லதுதானே’’ என்றார் ஒரு நண்பர். இழுத்தால் நல்லதுதான், இழுத்தால்தானே! புண்ணியத்துக்காக தேர்வடத்தைத் தொட்டுவிட்டுச் செல்லும் பார்ப்பனர்களாலும், வடமிழுப்பது போல காமெராவுக்கு போஸ் கொடுக்கும் பெரிய மனிதர்களாலும் எந்த ஊரிலும் தேர் அசைந்ததில்லை.

2006-இல் ஆட்சிக்கு வந்த கருணாநிதி, அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்க அவசரச் சட்டம் கொண்டு வந்தார். உடனே கருணாநிதிக்குத் தஞ்சையில் பாராட்டு விழா நடத்தினார் வீரமணி. பார்ப்பனரல்லாத அர்ச்சகர் கருவறையில் பூசை செய்வது போலவும், பார்ப்பனர்கள் வெளியே நின்று சாமி கும்பிடுவது போலவும் சிலை செய்து கருணாநிதிக்குப் பரிசளித்தார். கருணாநிதிக்குப் பாராட்டு விழா நடத்திய சாதனைக்காக வீரமணியைப் பாராட்டி சென்னையில் ஒரு ஆடம்பர விருந்து வைத்தார்கள் அவரது தொண்டர்கள். விருந்து செரிப்பதற்குள் கருணாநிதி கொண்டு வந்த சட்டத்துக்குத் தடையாணை பெற்றார்கள் பார்ப்பன அர்ச்சகர்கள். தடையாணையை அருளிய நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன்.



அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்ட வழக்கில்,
பார்ப்பன ஜெயாவின் சூழ்ச்சியை அம்பலப்படுத்தி, ம.உ.பா.மையமும்
அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கமும் இணைந்து
30.01.2013 அன்று சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இதன் விளைவாக 2007-08 -இல் அர்ச்சகர் பள்ளியில் பயிற்சி முடித்த பின்னரும் 206 மாணவர்கள் தெருவில் நிறுத்தப்பட்டார்கள். தலைவர்கள் மனது வைத்தால் வேலை கிடைக்கும் என்று வெகுளித்தனமாக நம்பி ஓட்டுக்கட்சித் தலைவர்கள் வீட்டுக்கு நடையாய் நடந்தார்கள். தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனங்கள் முதல் கருப்புச் சட்டை ஆதீனம் வரை அனைவரையும் பலமுறை பார்த்துச் சலித்தார்கள்.

இம்மாணவர்களை, தமிழகம் முழுவதும் தேடிப் பிடித்து அவர்களைச் சங்கமாகத் திரட்டினார்கள் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள். உச்ச நீதிமன்ற வழக்கில் மாணவர்களையும் ஒரு தரப்பாகச் சேர்த்தார்கள். மாணவர்களை வைத்து ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி, பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மூலம் மக்கள் மன்றத்தில் இப்பிரச்சினையை பிரபலப்படுத்தினார்கள். படித்து முடித்து தீட்சையும் பெற்றுவிட்ட இம்மாணவர்களுக்குச் சான்றிதழைக் கூட தி.மு.க. அரசு வழங்கவில்லை. அதனைப் போராடிப் பெற்றுத் தந்தார்கள். தமிழகம் முழுவதும் பல நகரங்களில் அர்ச்சக மாணவர் சங்கமும் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் இணைந்து உண்ணாநிலைப் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார்கள். உச்சநீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருக்கும் மதுரை மீனாட்சி கோயில் அர்ச்சகர்களை எதிர்த்தும், வழக்கை விரைந்து நடத்த முயற்சிக்காத தி.மு.க. அரசைக் கண்டித்தும் மதுரை மீனாட்சி கோயிலை முற்றுகையிடும் போராட்டம் நடத்திக் கைதானார்கள்.

செப்-2010-இல் பெரியார் பிறந்த நாளன்று, திருவண்ணாமலையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார்கள் அர்ச்சக மாணவர்கள். அந்தப் புகைப்படம் ஊடகங்களில் பிரபலமாகவே, ஆத்திரம் கொண்ட இந்து முன்னணிக் காலிகளால் தாக்கப்பட்டார் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் அரங்கநாதன். ‘‘திருவண்ணாமலைக் கோயிலில் பிரசாத லட்டு பிடிப்பதற்குக்கூடப் பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்’’ என்று தி.மு.க. ஆட்சியில் அறநிலையத்துறை விளம்பரம் கொடுத்தது. உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தவுடன் அதனை அரசு திரும்பப் பெற்றது. 2009 முதல் இன்றுவரை உச்சநீதிமன்ற வழக்குக்காக

சுமார் 15 முறையாவது டெல்லிக்கு அலைந்திருக்கிறார்கள் ம.உ.பா. மைய வழக்குரைஞர்கள்.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், ''பார்ப்பன அர்ச்சகர்களுடன் பேசி சுமுகத் தீர்வுக்கு வருகிறோம்'' என்று கூறி, நீதிமன்றத்தில் 6 மாத அவகாசம் பெற்றது தமிழக அரசு. ''இது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் முயற்சி; ஆகம விதிப்படி அமையாத சிறு கோயில்களில் சூத்திர அர்ச்சகர்களுக்கு வேலை போட்டுக் கொடுத்து வாயை அடைத்துவிட்டு, பெருங்கோயில்களின் அர்ச்சகர் பதவியைப் பார்ப்பனர்களே வைத்துக் கொள்வதற்கான சூழ்ச்சி'' என்று அம்பலப்படுத்தி ஜனவரி 2013-இல் சென்னையில் ஒரு ஆர்ப்பாட்டமும் பத்திரிகையாளர் சந்திப்பும் நடத்தப்பட்டது. இதற்குப் பிறகுதான், ''ஆறுமாதம் தவணை வாங்கி ஜெயலலிதா அரசு செய்தது என்ன?'' என்ற கேள்வியையே எழுப்பினார் கருணாநிதி.



அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்தை அமல்படுத்தக் கோரி ம.உ.பா.மையமும் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கமும் நடத்திய போராட்டங்கள் பற்றிய தொகுப்பு நூலின் முகப்பு அட்டை.

இவையெல்லாம் இப்பிரச்சினையைக் கையிலெடுத்துப் போராடிக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதற்கான ஆதாரங்கள். ஆனால், ஆகஸ்டு 1 ஆர்ப்பாட்டத்தையொட்டி தி.க. போட்டிருக்கும் வெளியீட்டில் இவை பற்றியெல்லாம் ஒரு வார்த்தை கூடக் கிடையாது. அன்று முதல் இன்று வரை தாங்கள்தான் இந்தக் கோரிக்கைக்காகப் போராடுவதாக காட்டிக் கொள்ள விரும்புகிறார் வீரமணி. ஆனால் அதற்குத் தேவைப்படும் சரக்குகூட அவர்களிடம் இல்லை.

பெரியாரின் மறைவுக்குப் பின், இந்தக் கோரிக்கைக்காக வீரமணி உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்ற உண்மையை தி.க. வின் வெளியீட்டைப் படிப்பவர்கள் யாரும் புரிந்து கொள்ள முடியும். கல்வி வியாபாரம் செய்து கல்லா கட்டுவதும், பல நூறு கோடி மதிப்புள்ள சொத்துக்களை மேலும் பெருக்குவதும்தான் வீரமணி நடத்திவரும் தொழில் சாம்ராச்சியத்தின் இலட்சியம். பெரியாரின் சொத்துக்கு மட்டுமின்றி, அவரது எழுத்துக்கும் வாரிசுரிமை கோரியவராயிற்றே வீரமணி! அர்ச்சக மாணவர்களுக்காக மற்றவர்கள் போராடினாலும், பெரியார் எழுப்பிய கோரிக்கை என்பதால், வாரிசுரிமை என்ற அடிப்படையில் அதற்குரிய பெருமை தனக்கே சேரவேண்டும் என்றுகூட அவர் கோரக்கூடும்!

ஜூலை 20 அன்று புதிய தலைமுறை தொலைக்காட்சியின் ''ரௌத்திரம் பழகு'' நிகழ்ச்சியில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் பிரச்சினை ஒளிபரப்பானது. ம.உ.பா. மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ராஜுவை சென்னைக்கு வரவழைத்து பேட்டி எடுத்த அந்த தொலைக்காட்சி அவரை முழுமையாக இருட்டடிப்பு செய்து விட்டு, வீரமணியின் பேட்டியை மட்டும் ஒளிபரப்பியது. பார்ப்பன என்ற சொல்லைக்கூட உச்சரிக்கப் பயந்த வெட்கக்கேடான அந்த நிகழ்ச்சியில், முதிர்ந்த கல்வி வியாபாரி பாரி வேந்தரின் தொலைக்காட்சி வாயிலாக, மூத்த கல்வி வியாபாரியான வீரமணி தனக்கு விளம்பரம் தேடிக்கொண்டார்.

விளம்பரம் தேடும் விசயத்தில் வீரமணி எப்போதுமே கூச்சம் பார்ப்பதில்லை. 2009-இல் தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழ் பாடும் போராட்டத்தில் வெற்றி கண்டது மனித உரிமைப் பாதுகாப்பு மையம். இதற்காக களத்தில் நின்று போராடியதும், தடியடி பெற்று சிறை சென்றதும் ம.க.இ.க., வி.வி.மு., மற்றும் பு.மா.இ.மு., தோழர்கள். போராடிய சிவனடியாருக்கு விருது கொடுத்தவரோ தமிழர் தலைவர் வீரமணி.

வரலாற்றில் தனது இடத்தை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு இந்த நிகழ்வைக் கல்வெட்டாக செதுக்கி கோவில் வாசலில் பதிக்க ஏற்பாடு செய்திருந்தார் வீரமணி. கடலூர் மாவட்ட தி.மு.க. அமைச்சரான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தனது பெயரும் வரலாற்றில் இடம்பெற வேண்டும் என்று நியாயமாக ஆசைப்பட்டிருக்கிறார். அவர் பெயர் கல்வெட்டில் இல்லை என்பதால் உடன்பிறப்புகள் கல்வெட்டைப் பெயர்த்துக் கடாசி விட்டனர். தமிழில் பாடும் போராட்டத்தில் தமிழர் தலைவர் ஆற்றிய வரலாற்றுப் பாத்திரத்தைக் கூறும் கல்வெட்டு இப்போது போலீசு காவலில் இருக்கிறது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமையை நிலைநாட்ட சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப் போவதாக அறிவிப்பு வெளியிட்ட தி.க. இளைஞர் அணியின் இராசபாளையம் மாநாடு.



அர்ச்சகர் போராட்ட வரலாறுக்காவது தமிழர்தலைவரின் பெயரைச்சுமக்கும் பாக்கியம் கிடைக்குமா, பார்க்கலாம்.

● தொரட்டி

## ஸ்னோடென் விவகாரம்:

# பொலிவியாவின் சுயமரியாதை! இந்தியாவின் அடிமைத்தனம்!!

**அமெரிக்காவின் தொங்குசதை நாடாக இந்தியா மாறிவிட்டதை ஸ்னோடென் விவகாரம் நிரூபித்திருக்கிறது.**

அமெரிக்க அரசின் ஒட்டுக்கேட்பு மற்றும் இணையதளக் கண்காணிப்பு சதித்திட்டத்தை அம்பலப்படுத்திய ஸ்னோடெனை வேட்டையாடுகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஸ்னோடென் ரசிய விமானநிலையத்தில் இருந்து கொண்டு, தனக்குத் தஞ்சம் கொடுக்க மறுத்த நாடுகளின் முகங்களை ஒவ்வொன்றாகத் தோலுரித்துக் கொண்டிருக்கிறார். இந்தியாவின் முகத்திலோ அமெரிக்க அடிமையின் சாயல் அப்பட்டமாகத் தெரிகிறது.

பிரிசம் என்னும் அமெரிக்காவின் இணையக் கண்காணிப்பு வளையம் உலக நாடுகள் அனைத்தையும் வேவு பார்க்கிறது என்ற உண்மையை ஸ்னோடென் அம்பலப்படுத்தியவுடன், ‘‘இந்தியக் குடிமக்களின் தனிப்பட்ட உரிமைகள் மீறப்பட்டிருப்பின், அதனை நம்மால் ஏற்றுக்கொள்ளவியலாது’’ என்று ஜூன் 12 அன்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கூறினார், இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி அக்பர்தீன். அமெரிக்காவால் அதிகம் வேவு பார்க்கப்படும் நாடுகளில் இந்தியா ஐந்தாவது இடத்தில் இருக்கிறது என்ற செய்தி அடுத்து வெளியானது. ‘‘இது கவலையளிக்கிறது. ஆச்சரியமளிக்கிறது. எனினும், அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வருவதற்கு இந்தியா தயாராக இல்லை’’ என்று நெளிந்தார் அந்த அதிகாரி.

அமெரிக்காவின் மிரட்டல்களையும் மீறி ஸ்னோடென்னை ஆதரிக்கும் பொலிவியா அதிபர் ஈவா மோரேல்ஸ்



அமெரிக்காவில் இருக்கும் இந்தியத் தூதரகம் உட்பட மொத்தம் 37 தூதரகங்களில் இருந்து அனுப்பும் தொலைநகல்கள், அசாதாரண வேவு பார்க்கும் கருவிகளால் வேவு பார்க்கப்படுகின்றன என்று, ஜூன் 30 அன்று கார்டியன் நாளேடு (ஸ்னோடெனிடமிருந்து தகவலைப் பெற்று) அம்பலமாக்கியது. ‘‘அமெரிக்கா யாரையும் உளவு பார்க்கவில்லை, தொலைபேசி உரையாடல்கள் மற்றும் குறுந்தகவல்களின் வகைமாதிரியை மட்டுமே பகுப்பாய்ந்திருக்கிறது’’ என்று ஜூலை 1-ஆம் தேதியன்று வெட்கமே இல்லாமல் சப்பைக் கட்டினார் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித். இது அவருடைய சொந்தக் கருத்தல்ல; அமெரிக்க அரசுச் செயலர் ஜான் கெர்ரியின் கூறிய கருத்தையே இந்திய அரசின் கருத்தாக வாந்தியெடுத்தார் குர்ஷித்.



ரசியாவில் தற்காலிகமாக அரசியல் தஞ்சமடைந்துள்ள ஸ்னோடென்

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் அரசியல் தஞ்சம் கேட்டு கோரிக்கை வைத்தார் ஸ்னோடென். இந்திய அரசின் மிச்சம் மீதியிருந்த மானத்தையும் வாங்கிவிட்டது இந்தக் கோரிக்கை. ஆத்திரம் தலைக்கேறிய குர்ஷித், ‘‘தஞ்சம் வேண்டுவோர்க்கெல்லாம் கொடுக்க இது ஒன்றும் திறந்த வீடல்ல’’ என்று சீறினார்.

2009-ஆம் ஆண்டு இலண்டனில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொண்ட, ஜி-20 தலைவர்கள் கூட்டத்தின் போதும், அதே ஆண்டு செப்டம்பரில் நடந்த நிதி அமைச்சர்கள் கூட்டத்திலும் கலந்துகொண்ட அயல்நாட்டு உறுப்பினர்களை, பிரிட்டன் மற்றும் அமெரிக்க உளவு நிறுவனங்கள் சேர்ந்து வேவு பார்த்த செய்தியும் அடுக்கடுக்காக வெளிவந்தன. இதற்கு இந்திய அரசிடமிருந்து ஒரு எதிர்வினைகூட வரவில்லை. ஜெயலலிதாவின் அமைச்சர்களைப் போல கூச்சநாச்சமே இல்லாமல் அமெரிக்காவின் முன் இந்தியா வளைந்து நெளிவது அப்பட்டமாக அம்பலமாகவே, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் காறி உமிழத் தொடங்கின. அதற்குப் பிறகுதான், ‘‘வர

விருக்கும் இணையப் பாதுகாப்பு கூட்டத்தில் அமெரிக்காவிடம் இவ்விசயம் பற்றிப் பேசப் படும்'' என்று சமாளித்து ஒரு அறிக்கை விட் டார் சல்மான் குர்ஷித்.



ஒரு நாட்டின் தூதரகத்தை வேவு பார்ப்ப தென்பது அந்நாட்டின் மீதே போர் தொடுப்ப தற்கு ஒப்பான செயலாகும். ஆனால் அரசி யல், பொருளாதாரம், இராணுவம் ஆகிய அனைத்துத் துறைகளிலும், அமெரிக்க அடி மையாகவும், ஒடும்பிள்ளையாகவும் ஆகி விட்ட இந்தியா, அதைப் பற்றியெல்லாம் ஏன் கவலைப்படப் போகிறது? ''தூதரகம் மட்டு மல்ல; விருந்தினர் விடுதிகள், கார்கள் உள் ளிட்ட அனைத்தையும் வேவு பார்ப்பது சகஜ மான விசயம்'' என்று கூறி குர்ஷித்துக்கு வக் காலத்து வாங்கினார் முன்னாள் அமெரிக்கத் தூதர் ரோனேன் சென். இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை விமர்சித்த அரசியல் கட்சிகளைத் ''தலை யறுபட்ட கோழிகள்'' என்று தெனாவெட்டாகப் பேசிய வர் ரோனேன் சென். தற்போது இவர் டாடா மோட்டார் ஸின் இயக்குநர். இந்திய ஆளும் வர்க்கம் மற்றும் அர சின் அமெரிக்க அடிமைத்தனத்துக்கு இதற்கு மேலும் விளக்கங்கள் தேவையில்லை.

உலக மேலாதிக்க சக்தியான அமெரிக்காவை எதிர்த்து நிற்க அஞ்சி, பல நாடுகளும் ஸ்னோடெனின் அடைக் கலக் கோரிக்கையை நிராகரித்திருக்கின்றன என்பது உண் மைதான். எனினும், இந்தியாவின் அடிமைத்தனம் விசே டமானது. ''இது திறந்த வீடல்ல'' என்ற குர்ஷித்தின் திமிர்த்தனமான பேச்சில், அடிமைத்தனத்தையே பெரு மிதமாகக் கருதும் ஒரு அடியாளுக்குரிய அகம்பாவம் வெளிப்பட்டது. இந்திய நாட்டை மட்டுமின்றி, இந்தி யக் குடிமக்களின் படுக்கையறையையும், இந்திய அர சின் தூதரகத்தையும் திறந்த வீடாகக் கருதி உள்ளே புகுந்து உளவு பார்க்கும் அமெரிக்க அரசிடம் ''இது திறந்த வீடல்ல'' என்று கூறும் துணிவு இந்திய அரசுக்கு இல்லை. தனியொரு மனிதனாக அமெரிக்க வல்லரசை எதிர்த்து நிற்கும் ஸ்னோடெனின் வீரத்தைக் கண்டு நடுங்கிக் குரைத்தது மன்மோகன் அரசு.

இந்தியாவைப் போன்ற ஒதிய மரங்களுக்கு இல்லாத துணிவை சின்னஞ்சிறிய தென்னமெரிக்க நாடுகள் வெளிப்படுத்தின. பொலிவியா, நிகரகுவா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகள் ஸ்னோடெனுக்கு அரசி யல் தஞ்சம் தருவோம் என்று கூறி அமெரிக்க மேலாதிக் கத்தினை எதிர்த்து தலைநிமிர்ந்து நிற்கின்றன. இதனால் ஆத்திரம் கொண்ட அமெரிக்க அரசு, ரஷ்யாவில் நடந்த எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி செய்யும் நாடு களின் மாநாட்டில் பங்கேற்றுத் திரும்பும் பொழுது, பொலிவியப் அதிபர் ஈவா மோரேல்ஸ் தன்னுடைய தனி விமானத்தில் ஸ்னோடெனை ஒளித்து வைத்திருக்கிறார் என்று வதந்தியைப் பரப்பியது. அமெரிக்க அரசின் கட்டளைக்குப் பணிந்து பல ஐரோப்பிய நாடுகள் தங் கள் வான் வழியே அவ்விமானத்தை அனுமதிக்க மறுத்தன.

ஆஸ்திரியாவில் விமானம் இறங்கியவுடன், அமெரிக்க உளவுத்துறையின் தூண்டுதலின் பேரில், சர் வதேச விதிமுறைகளுக்கு விரோதமாக விமானத்துக்கு உள்ளே புகுந்து சோதனை நடத்தப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் அமெரிக்க அடிவருடித்தனத்தை அம்பலப் படுத்தியிருப்பதோடு, 'பேரரசர்' அமெரிக்காவோடு கைகோர்த்துக் கொண்டு தென்னமெரிக்க நாடுகளை இன்னும் தங்கள் காலனிகளாக நடத்தும் ஐரோப்பிய நாடுகளின் முகத்திரையையும் கிழித்தார் மோரேல்ஸ். அமெரிக்கத் தூதரகத்தைத் தன் நாட்டிலிருந்து வெளி யேற்றவும் தயங்கப் போவதில்லை எனவும் எச்சரித்தார்.

ஐரோப்பிய நாடுகள், ஈவா மோரேல்ஸை அவமானப் படுத்தியதைத் தென்னமெரிக்க நாடுகளின் கூட்டமைப் பும் கடுமையாக கண்டித்தது. வர்த்தக ஒப்பந்தங்களைக் காட்டி ஸ்னோடெனுக்கு புகலிடம் கொடுக்கக் கூடாது என அமெரிக்கா மிரட்டியபோது, ''மனித உரிமைகள் வர்த்தக நலன்களுக்கும் மேலானவை'' என்று கூறி மனித உரிமைக் காவலன் வேடமிடும் அமெரிக்காவின் முகத் தில் கரிபூசின தென்னமெரிக்க நாடுகள்.

அமெரிக்க போர்வெறி எந்திரத்தின் உதிரி உறுப்பாக மாறிவிட்டது இந்தியா. அரசியல், பொருளாதாரம், இராணுவத் துறைகள் அனைத்திலும் இறையாண்மை யையும் சுயேட்சைத் தன்மையையும் இழந்த முழு அடி மையாக நடந்து கொள்வதே தனது நலனுக்கு உகந்தது என்று இந்திய ஆளும் வர்க்கம் கருதுகிறது. அமெரிக்கா வுடன் முரண்படாதிருப்பதே நல்லது என்று கருதும் ஐரோப்பிய வல்லரசுகளும்கூட அமெரிக்காவின் இந்த மேலாதிக்க நடவடிக்கையைச் சம்பிரதாயமாக மட்டுமே எதிர்க்கின்றன. சொந்த நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தி தமது அரசியல் பொருளாதாரக் கொள்கை களை வகுக்கும் நாடுகள், அவை எவ்வளவு சிறிய வையாக இருந்தாலும், அவை மட்டும்தான் தமது இறை யாண்மையையும் தமது மக்களின் ஜனநாயக உரிமை யையும் பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்காவை எதிர்த்து நிற்கின்றன. ஒரு தனி மனிதனும்கூட அவ்வாறு எதிர்த்து நிற்க முடியும் என்பதைக் காட்டியிருக்கிறார் ஸ்னோடென்.

● சுப்பு

# சோனி சோரி மீதான பொய் வழக்குகள்:

# தொடரும் காட்டு வேட்டையின் அநீதி!

## சோனி சோரிக்குப் பிணை வழங்க மறுத்துள்ள சத்தீஸ்கர் உயர் நீதிமன்றம், காட்டுவேட்டையின் கூட்டாளியோ?

''நீங்கள் எங்களோடு இல்லையென்றால், அவர்களோடு இருக்கிறீர்கள்!'' - இப்படியொரு எச்சரிக்கையை, தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் ஆக்கிரமிப்பு போர்களைத் தொடங்கி வைத்தபொழுது அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ் அறிவித்தார். அமெரிக்க மேலாதிக்க வல்லரசால் ஆப்கானியர்களுக்கும், இராக் மக்களுக்கும் எதிராக விடப்பட்ட இந்த மிரட்டலை, இந்திய அரசு சத்தீஸ்கரிலும் ஜார்கண்டிலும் வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களுக்கு எதிராக விடுத்து வருகிறது. இதனை, சத்தீஸ்கர் மாநிலம் - தண்டேவாடா மாவட்டத்திலுள்ள சமேலி கிராமத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளுக்குத் தாயான சோனி சோரி என்ற பழங்குடியினப் பெண்ணின் மீதும், அவரது சகோதரனின் மகன் லிங்காராம் கோடோபியின் மீதும் புனையப்பட்ட வழக்குகள் நிரூபிக்கின்றன.

சோனி சோரியையும் லிங்காராமையும் மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தி வரும் சத்தீஸ்கர் அரசு, சோனி சோரி மீது எட்டு கிரிமினல் வழக்குகளையும் லிங்காராம் மீது இரண்டு கிரிமினல் வழக்குகளையும் தொடுத்து, அவர்கள் இருவரையும் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சிறை வைத்திருக்கிறது. ''அவர்கள் இருவரும் சத்தீஸ்கர் மாநிலத்தில் செயல்பட்டு வரும் எஸ்ஸார் என்ற கார்ப்பரேட் நிறுவனத்திடமிருந்து 15 இலட்ச ரூபாயைப் 'பாதுகாப்புப் பணமாக' (Protection money)ப் பெற்று மாவோயிஸ்டுகளிடம் கொடுக்கும் தரகர்களாகச் செயல்பட்டனர்'' என்பது இருவர் மீதும் போடப்பட்டுள்ள முக்கிய வழக்காகும். இவ்வழக்கில் தங்களுக்குப் பிணை வழங்கக் கோரி அவர்கள் தாக்கல் செய்த மனுவை விசாரித்த சத்தீஸ்கர் உயர் நீதிமன்றம், ''குற்றத்தின் கொடியதன்மை கருதியும் ஆழமான சாட்சியங்களைக் கருதியும்'' பிணை வழங்க முடியாதெனக் கூறிவிட்டது.

பழங்குடியினத்தைச் சேர்ந்த சோனி சோரிக்கும் லிங்காராமுக்கும் பிணை மறுத்திருக்கும் உயர் நீதிமன்றம், இதேவழக்கில் இவர்களோடு சேர்த்துக் கைது செய்யப்பட்ட வேறு இருவருக்கு சில மாதங்களுக்கு முன்பு பிணை வழங்கியிருக்கிறது. அவர்களுள் ஒருவர் எஸ்ஸார் நிறுவனத்தின் பொது மேலாளர் வர்மா; மற்றொருவர் அந்நிறுவனத்தின் ஒப்பந்ததாரர் பி.கே.லாலா. அவர்கள் இருவரும்தான் 15 இலட்ச ரூபாய் பணத்தை சோனி சோரியிடமும் லிங்காராமிடம் கொடுப்பதற்காக எடுத்து வந்தனர் என்றும், பணத்தை அவர்களிடமிருந்துதான் கைப்பற்றியதாகவும் குற்றஞ்சுமத்தியிருந்தது, போலீசு. 'கையும் களவுமாக'ப் பிடிக்கப்பட்ட அவ்விருவருக்கும் பிணை வழங்கியபோது, நீதிபதிகள் குறிப்பிடும் குற்றத்தின் கொடியதன்மை எங்கே ஓடி ஒளிந்து கொண்டது? ஆழமான சாட்சியங்களைக் காணவிடாமல் நீதிபதிகளைத் தடுத்தது எது? இப்படி பாரபட்சமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது கார்ப்பரேட் கால மனுநீதி போலும்.

சோனி சோரி தாக்கல் செய்த பிணை மனு விசாரணைக்கு வருவதற்குச் சற்று முன்னதாகத்தான், அவர் மீது போடப்பட்டிருந்த எட்டு வழக்குகளில் ஆறு வழக்குகளிலிருந்து அவர் அடுத்தடுத்து விடுதலை செய்யப்பட்டார். குறிப்பாக, சத்தீஸ்கர் மாநில போலீசு மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது மற்றும் எஸ்ஸார் நிறுவனத்தின் வாகனங்களுக்குத் தீயிட்ட வழக்குகளுக்கும் சோனி சோரிக்கும் தொடர்பேயில்லை எனக் கூறி விசாரணை நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. இவ்வழக்குகள் சோடிக்கப்பட்டவை; அவருக்கு எதிராக நிறுத்தப்பட்ட சாட்சியங்கள் போலீசு தயாரித்த பொய் சாட்சியங்கள் என்பது இந்த வழக்குகளில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், சத்தீஸ்கர் உயர் நீதிமன்றம் எஸ்ஸார் நிறுவனத்திடமிருந்து மாவோயிஸ்டுகளுக்காகப் பணம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், போலீசு காட்டியுள்ள ஆழமான சாட்சியங்களை நம்பி பிணை

சிறையில் நடந்த சித்திரவதைகளுக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சோனி சோரி. (கோப்புப் படம்)



வழங்க முடியாது எனக் கூறியிருப்பது நகைப்புக்குரியது.

இத்தனை பொய் வழக்குகளை மூன்று குழந்தைகளுக்கான தாயான சோனி சோரி மீது ஏன் போட வேண்டும்? சோனி சோரியும் லிங்காராமும் போலீசின் ஆட்காட்டிகளாகச் செயல்பட மறுத்தனர் என்பது தவிர இதற்கு வேறு காரணம் எதுவும் கிடையாது. மூன்றாண்டுகளுக்கு முன்பு லிங்காராமைக் கடத்திச் சென்ற சத்தீஸ்கர் போலீசு, அவரைச் சட்டவிரோதக் காவலில் அடைத்து வைத்து, சல்வா ஜுடும் குண்டர்படையில் சேரச் சொல்லி சித்திரவதை செய்தது. லிங்காராம் போலீசாரால் கடத்தப்பட்டதை அறிந்த சோனி சோரி, சத்தீஸ்கர் மாநில உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு போட்டு, போலீசின் சட்டவிரோதக் காவலில் இருந்து அவரை விடுவித்தார். சத்தீஸ்கர் போலீசு அந்தச் சமயத்தில் லிங்காராமை விடுவித்து விட்டாலும், அவரையும் அவரது குடும்பத்தாரையும் தொடர்ந்து மிரட்டி வந்தது. சத்தீஸ்கர் போலீசிடமிருந்து லிங்காராமைக் காக்க எண்ணிய சோனி சோரி, அவரை டெல்லிக்கு அனுப்பி வைத்ததோடு, பத்திரிகையாளர் படிப்பிலும் சேர்த்துவிட்டார்.



இரண்டு பொய் வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள லிங்காராம் கோடோபி.

இச்சமயத்தில்தான் சத்தீஸ்கர் போலீசும் துணை இராணுவப் படைகளும் இணைந்து தர்மேட்லா, மோர்பள்ளி, திம்மாபுரம் ஆகிய மூன்று கிராமங்கள் மீது 2011-ஆம் ஆண்டு மார்ச் 11 மற்றும் 15 ஆகிய இரு தினங்களில் மிகக் கொடூரமான தாக்குதலைத் தொடுத்தன. மத்திய ரிசர்வ் போலீசு படையைச் சேர்ந்த 76 போலீசாரை மாவோயிஸ்டுகள் கொன்றொழித்ததற்குப் பழிதீர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட தாக்குதல் இது. பத்திரிகையாளராகப் பயிற்சி பெற்றிருந்த லிங்காராம் இத்தாக்குதல் குறித்துப் பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகப் பேட்டி கண்டு முக்கியமான ஆதாரங்களைத் தொகுத்து வைத்திருந்தார். இத்தாக்குதல் குறித்த விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றம் டி.பி.ஷர்மா கமிசனை ஜூன் 11, 2011-இல் நியமித்தது. இக்கமிசனிடம் போலீசு நடத்திய அட்டூழியங்கள் பற்றிய ஆதாரங்களை லிங்காராம் தருவார் எனச் சந்தேகித்த சத்தீஸ்கர் போலீசு, அதனைத் தடுக்கும் முகமாக, அவரையும் அவருக்கு ஆதரவாக இருந்துவரும் சோனி சோரியையும் செப்.2011-இல் கைது செய்து, அவர்கள் இருவரும் மாவோயிஸ்டுகளின் தரகர்களாகச் செயல்படுகிறார்கள் என்பது உள்ளிட்டுப் பல பொய் வழக்குகளை அடுத்தடுத்து அவர்கள் இருவர் மீதும் புனைந்தது.

சிறைச்சாலையில் சோனி சோரிக்கு மின் அதிர்ச்சி கொடுக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார். அவரது பிறப்புறுப்பில் இரண்டு கற்களும், ஆசன வாயில் பகுதியில் ஒரு கல்லும் திணிக்கப்பட்டு பாலியில்ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டார். உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி டெல்லி-எய்ம்ஸ் மருத்துவர்கள் சோனி சோரியைப் பரிசோதனைக்கு உட்படுத்திய பொழுது, அவர் மீது நடத்தப்பட்ட இம்மனித உரிமை மீறல்கள் அனைத்தும் அம்பலமாகின.

பழங்குடியின மக்களுக்கு எதிராகக் காட்டுவேட்டையை நடத்திவரும் அரசுக்கும் போலீசுக்கும் ஆட்காட்டியாக நடந்துகொள்ள மறுத்துவரும் சோனி சோரியைச் சட்டப்படித் தண்டிக்க முடியாது என்பதால், அவருக்குப் பிணை வழங்க மறுப்பதன் மூலம் சட்டவிரோதமாக, அநீதியான முறையில் தண்டித்து வருகிறது, ஆளுங்கும்பல். இப்படி அநீதியான முறையில் சோனி சோரி மட்டுமல்ல, அவரது மாநிலத்தில் மட்டும் 2,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களும், ஜார்கண்டில் 5,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களும் மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அப்பழங்குடியின மக்களுக்கு இந்தி மொழி தெரியாது; தனியாக வக்கீல்களை வைத்து வழக்கை நடத்துமளவிற்கு அவர்களுக்கு வசதி கிடையாது என்பதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுக்குப் பிணைகூட வழங்காமல், காராகிரகத்தில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்து வருகிறது, இந்திய அரசு.

சோனி சோரியையும் லிங்காராமையும் விடுதலை செய்யக் கோரி அனைத்திந்திய மாணவர் சங்கம் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்)




ஓட்டுக்கட்சிகள், அதிகார வர்க்கம், போலீசு ஆகியவற்றின் மீதெல்லாம் நம்பிக்கை இழந்துவிட்ட மக்களுக்கு நீதிமன்றங்கள் மட்டும்தான் கடைசிப் புகலிடமாக இருந்து வருகிறது எனத் தேசிய பத்திரிகைகளும், சோ போன்ற பார்ப்பனக் கும்பலும் கூறிவருகின்றனர். இந்த வாதம் மோசடியானது என்பதையும், நீதிமன்றங்களும் ஆளுங்கும்பலின் கைத்தடிகளாகத்தான் செயல்பட்டு வருகின்றன என்பதையும் சோனி சோரி மீதும் அப்பாவி பழங்குடியின மக்கள் மீதும் போடப்பட்டுள்ள வழக்குகளும், விசாரணைகளும் நிரூபித்துக் காட்டவில்லையா?

• குப்பன்

# பிரேசில்:

# ஏழைகளின் பேரெழுச்சி! போலி சோசலிசத்தின் படுதோல்வி!!

**உலகமயத்துக்கு இசைவாக நடந்து கொண்ட போலி சோசலிஸ்டுகளை, பிரேசில் நாட்டு மக்கள் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கியெறிந்துவிட்டனர்.**

உழைக்கும் மக்களின் தெருப் போராட்டங்களால் தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள இயற்கை வளமிக்க மிகப் பெரிய நாடான பிரேசில், கடந்த இரு மாதங்களாக குலுங்கிக் கொண்டிருக்கிறது. பிரசில்லா, ரியோ டி ஜெனிரோ, சாவோபோலோ, சால்வடார் - எனப் பெரு நகரங்களில் உழைக்கும் மக்கள் இலட்சக்கணக்கில் வீதிகளில் திரண்டு பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் சாலை மறியல் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். ஆளும் கும்பலுக்கும் போலி சோசலிச ஊழல் அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்துக்கும் எதிரான இப்போராட்டத்தின் மீதான போலீசின் தாக்குதலை எதிர்த்து மக்கள் வீதிகளில் வீரப்போர் புரிகின்றனர். பல பகுதிகளில் அரசு அலுவலகங்களும் பெரும் வர்த்தக அங்காடிகளும் வங்கிகளும் சூறையாடப்பட்டன. தொழிலாளர்கள், விவசாயிகள் மட்டுமின்றி, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், இளைஞர்கள், பெண்கள் - என அனைவரும் அணிதிரண்டு சாலையை மறித்து பல நாட்களாகத் தொடர்ந்து போராடுகின்றனர். அங்கேயே உணவு தயாரித்துக் கொண்டு தங்களுக்குள் விநியோகித்துக் கொள்கின்றனர். இசைக்கருவிகள் ஒலிக்க, ஆடல்-பாடல்களுடன் இரவு பகலாகப் போராட்டம் தொடர்கிறது.




பேருந்துக் கட்டண உயர்வை எதிர்த்துத் தொடங்கிய இப்போராட்டம், பின்னர் மக்கள் மீதான வரித் திணிப்பு, சூறையாடல், சமத்துவமின்மை, அதிகார முறைகேடுகள், புரையோடிக் கிடக்கும் ஊழல், மருத்துவ - சுகாதார வசதியின்மை, இலவசக் கல்வி இல்லாமை - என அனைத்துக்கும் எதிரான போராட்டமாக வளர்ந்துள்ளது. குறிப்பாக, வருமாண்டில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டிக்காக 12 பெருநகரங்களில் விளையாட்டரங்கங்களை நவீனப்படுத்த பல்லாயிரம் கோடிகளை ஆட்சியாளர்கள் வாரியிறைப்பதை எதிர்த்து இப்போராட்டம் முன்னேறி வருகிறது. ''எங்களுக்குத் தேவை கால்பந்து விளையாட்டுக் கேளிக்கையல்ல. கல்வி, மருத்துவ வசதி, சுகாதார வசதிகள்தான். பொதுப் பணத்தை எடுத்து விளையாட்டுப் போட்டி என்ற பெயரில் சூறையாடுவதை நிறுத்தாதவரை எங்கள் போராட்டம் ஓயாது'' என்று எச்சரித்தார், விளையாட்டரங்கங்களை முற்றுகையிட்டு நடக்கும் போராட்டத்தில் பங்கேற்ற ஒரு இளம்பெண்.

''இது உலகமயத்தால் கொழுத்துப் போயுள்ள கோடீசுவர கும்பலுக்கும் அவர்களின் அரசுக்கும் எதிரான ஏழைகளின் போர். எல்லா ஓட்டுக் கட்சிகளும் மக்கள் விரோதிகள். இது ஒரு தொடக்கம்தான். இன்றைய அரசமைப்பு முறையை மாற்றியமைப்பதுதான் எங்கள் போராட்டத்தின் நோக்கம்'' என்று அறிவித்தார், வேலையின்றித் தவிக்கும் ஒரு இளைஞர்.

பிரேசிலின் பொருளாதாரம் வளமாக உள்ளது, தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு நாடு முன்னுதாரணமாகத் திகழ்கிறது, ரேசன் கடைகளுக்குப் பதிலாக உங்கள் பணம் உங்கள் கையில் என்ற திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது, வேலையின்மையும் வறுமையும் குறைந்துவிட்டது - என்றெல்லாம் முதலாளித்துவ ஊடகங்கள் ஓயாமல் பிரச்சாரம் செய்தன. 21-ஆம் நூற்றாண்டுக்கான புதிய வகைப்பட்ட சோசலிசப் பாதையில் பிரேசில் முன்னேறி வருவதாக போலி சோசலிஸ்டுகள் உச்சி முகர்ந்தனர். அவையெல்லாம் வடிகட்டிய பொய்கள் என்பதை 1992-க்குப் பிறகு நடக்கும் இம்மாபெரும் மக்கள் திரள் எழுச்சி நிரூபித்துக் காட்டிவிட்டது.

தொழிலாளர் கட்சி (பி.டி.), சோசலிச சுதந்திரக் கட்சி (பி.ஓ.எஸ்.எல்.), பிரேசில் கம்யூனிஸ்ட் கட்சி (பி.சி.பி.), சுதந்திரத் தாயகக் கட்சி (பி.பி.எல்.), ஐக்கிய சோசலிசத் தொழிலாளர் கட்சி (பி.எஸ்.டி.யு.), தொழிலாளர்களுக்கான கட்சி (பி.சி.ஓ.) - என பிரேசிலில் உள்ள பல வண்ண போலி சோசலிசக் கட்சிகள், தனியார்மய - தாராளமயமாக்கலுக்கு எதிரான மக்

களின் அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு தேர்தல் வெற்றியைச் சாதித்து, நாடாளுமன்றத்திலும் செனட்டிலும் கணிசமான இடங்களைக் கைப்பற்றின. இடதுசாரி சாயல் கொண்ட மையவாத பி.எம்.டி. போன்ற கட்சிகளுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு கடந்த 2002-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தன. இக்கட்சிகளும் அவற்றின் கூட்டணி அரசாங்கமும் ஆளும் வர்க்கத்துடன் இணக்கமாகவே நடந்து கொண்டன.



உலகமயத்தால் கொழுத்துப் போயுள்ள கோடீசுவர கும்பலுக்கும் அவர்களின் அரசுக்கும் எதிரான போராட்டத்தில் பிரேசில் நாட்டு உழைக்கும் மக்கள்.

போலி சோசலிசத் தொழிற்சங்கத் தலைவராக இருந்து, பின்னர் பிரேசிலின் அதிபரான தொழிலாளர் கட்சியைச் (பி.டி.) சேர்ந்த லூலா, ஐ.எம்.எஃப். கட்டளையிடும் பொருளாதாரக் கொள்கைகளைச் செயல்படுத்துவதாக உத்திரவாதம் அளித்த பின்னரே அரசுத் தலைவராக்கப்பட்டார். கீழிருந்து வரும் மக்களின் அதிருப்திக்கு ஒரு வடிகாலாகவும், புரட்சிக்கு எதிரான பாதுகாப்புக் கவசமாகவும் பி.டி. கட்சி மாறிப் போனது.

பிரேசிலில் போலி சோசலிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததையடுத்து, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சீர்குலைக்கும் நோக்கத்திற்காகவே ஏகாதிபத்தியங்களும் தன்னார்வக் குழுக்களும் ''உலக சமூக மன்றம்'' (WSF) என்ற அமைப்பை உருவாக்கின. ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கங்களிலிருந்து முகிழ்ந்த முன்னணியாகச் சித்தரிக்கப்பட்ட உலக சமூக மன்றத்தில் பிரேசில் தொழிலாளர் கட்சியும் அப்போதைய பிரேசில் அதிபர் லூலாவும் தலைமைப் பாத்திரமாற்றினர். ''இன்னொரு உலகம் சாத்தியமே'', ''மாற்றுகள் இருக்கின்றன'' - என்று இப்போலி சோசலிசப் பித்தலாட்டத்தையே ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியாக போலி கம்யூனிஸ்டுகளும் போலி சோசலிஸ்டுகளும் சித்தரித்தனர். ஆனால், எந்த நாட்டில் கருவாகி உருவாகி உலக சமூக மன்றம் வளர்ந்ததோ, அந்த நாட்டிலேயே அது குப்பைத் தொட்டியில் வீசியெறியப் பட்டுள்ளதை தற்போதைய மக்களின் எழுச்சி நிரூபித்துக் காட்டியுள்ளது.

பிரேசிலின் போலி சோசலிசப் பெண் அதிபர் டில்மா ரோவ்செஃப்.



லூலாவின் பதவிக் காலத்துக்குப் பின்னர், இதர போலி சோசலிச - மையவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து 16 கட்சி கூட்டணி அரசை அமைத்து, 2011-இல் ஆட்சிக்கு வந்த போலி சோசலிசப் பெண் அதிபரான டில்மா ரோவ்செஃப், அரசுத்துறை நிறுவனங்களின் மூலம் அடிக்கட்டுமானப் பணிகளைச் செய்வதை விட, தனியார் நிறுவனங்கள் மூலம் செய்வதுதான் செலவு குறைவானது என்று விமான நிலையங்களைத் தனியாருக்குத் தாரைவார்த்தார். அவரது அமைச்சர்கள் பலரும் ஊழல் பெருச்சாளிகளாக அம்பலப்பட்டுப் போயுள்ளனர். அவரது பி.டி. கட்சியின் விவசாயத் துறை அமைச்சராக இருந்த மிகுவல் ரோசெட்டோ, நிலப்பிரபுக்களின் விசுவாசியாகவே மாறிப் போனார். இப்போலி சோசலிசக் கூட்டணி அரசின் தொலைத்தொடர்பு அமைச்சரோ அலைக்கற்றை ஊழலில் சிக்கி நாறிப் போனார். மறுகாலனியாதிக்கச் சூறையாடலுக்கு ஒரு சோசலிச முகமூடியை அளித்ததைத் தவிர இப்போலி சோசலிசக் கட்சிகளால் வேறெதையும் சாதிக்க முடியவில்லை.

பிரேசிலின் தற்போதைய அரசியலமைப்பு முறையே மோசடியானது. அது பெருமுதலாளிகளுக்கும் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கும் சேவை செய்வதற்கானது. பல்வேறு போலி சோசலிசக் கட்சிகள் அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதிலும், அவை பொதுச் சொத்தைச் சூறையாடும் முதலாளிகளுக்குச் சேவை செய்து பொறுக்கித் தின்னும் கட்சிகள்தான். பொய் நெல்லைக் குத்தி பொங்க முடியாது. உலகமயத்துடன் இசைந்து போகும் போலி சோசலிசத்தால் பெயரளவிலான மக்கள்நலத் திட்டங்களையும் சீர்திருத்தங்களையும்கூட நிறைவேற்ற முடியாது - என்ற அரிய படிப்பினைகளை உலகிற்கு வழங்கியுள்ள பிரேசில் மக்களின் எழுச்சி, நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டமும் சாலை மறியலுமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், போராட்டத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்ல ஒரு புரட்சிகரத் தலைமை இல்லாததால், பிரேசில் மக்களின் மகத்தான இப்போராட்டம் தொடர்ந்து முன்னேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ● தனபால்

# எகிப்து:
# கேலிக்கூத்தானது அரபு வசந்தம்!

**பின் நவீனத்துவவாதிகளால் கொண்டாடப்பட்ட எகிப்தின் வானவில் புரட்சி, இராணுவ ஆட்சியைத் தாங்கிப் பிடிப்பதாகச் சீரழிந்து போனது.**

''உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ள மாபெரும் சம்பவங்கள் அனைத்தும் இரண்டு தடவை தோன்றுகின்றன. மாபெரும் தலைவர்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் தோன்றுகிறார்கள் என்று ஹெகல் எழுதியுள்ளார். அவர்களுடைய தோற்றம் முதல் சந்தர்ப்பத்தில் சோகக் கதையாகவும் இரண்டாவது சந்தர்ப்பத்தில் கேலிக்கூத்தாகவும் இருக்கிறது என்பதை எழுதுவதற்கு அவர் மறந்துவிட்டார்'' என பிரான்சில் நடந்த திடீர் புரட்சி குறித்து எழுதும்போது குறிப்பிட்டார் பேராசான் காரல் மார்க்ஸ். எகிப்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்துள்ள அரசியல் மாற்றங்கள், குறிப்பாக கடந்த ஜூலை மாத முதல் வாரத்தில் அந்நாட்டின் இராணுவம் ஒரேயொரு ஆணையின் மூலமாக ஆட்சியதிகாரத்தை மீண்டும் நேரடியாகத் தனது கையில் எடுத்துக் கொண்டிருப்பது காலத்தால் அழியாத மார்க்ஸின் இந்த விமர்சனத்தை நினைவுபடுத்துவதாக அமைந்திருக்கிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு பாசிச சர்வாதிகார அதிபர் ஹோஸ்னி முபாரக்கை அதிகாரத்திலிருந்து துரத்தியடித்த எகிப்து மக்களின் தன்னெழுச்சியான போராட்டத்தைப் பின்நவீனத்துவவாதிகள் அரபுலகின் புரட்சியென்றும் இணையதளப் புரட்சியென்றும் மட்டும் சுட்டவில்லை. அதனை, கம்யூனிசப் புரட்சியாளர்கள் முன்வைக்கும் அமைப்புரீதியாகத் திரட்டப்பட்ட, ஆயுதந்தாங்கிய புரட்சிக்கு மாற்றாகவும் முன்வைத்தார்கள். அரபு வசந்தம் என அவர்கள் தூக்கி வைத்துக் கொண்டாடிய அம்முதல் புரட்சி, முசுலீம் மத அடிப்படைவாதக் கட்சியான முசுலீம் சகோதரத்துவக் கட்சியை அதிகாரத்தில் உட்காரவைப்பதாக முடிந்துபோனது.

எகிப்தில் கடந்த ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் முசுலீம் சகோதரத்துவக் கட்சியைச் சேர்ந்த முகம்மது மோர்ஸி 52 சத வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவர் பதவியேற்ற ஓரிரு மாதங்களிலேயே, முதலாளித்துவ தாராளவாதக் கட்சிகளும், கிறித்தவ சிறுபான்மை அமைப்புகளும், முபாரக்கின் ஆதரவாளர்களும் இணைந்து மோர்ஸி அரசுக்கு எதிரான போராட்டங்களைத் தொடங்கினார்கள். இப்போராட்டங்கள் கடந்த ஜூன் மாத இறுதியில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற அரசியல் ஆர்ப்பாட்டமாக மாறியது. எதிர்த்தரப்பால் இரண்டாம் புரட்சி என அழைக்கப்படும் இப்போராட்டங்கள், மோர்ஸியின் இடத்தில், இழிபுகழ் படைத்த, ஹோஸ்னி முபாரக்கின் 30 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சியைத் தாங்கிப் பிடித்து வந்த எகிப்திய இராணுவம் ஆட்சியில் அமர்ந்து கொள்ளுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

எகிப்திய இராணுவம் மோர்ஸியை அதிபர் பதவியிலிருந்து விலக்கிய கையோடு அவரையும் முசுலீம் சகோதரத்துவக் கட்சியின் முக்கியத் தலைவர்களையும் கைது செய்து, தடுப்புக் காவலில் வைத்தது; நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கலைத்ததோடு, மோர்ஸி அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் சாசனத்தையும் ரத்து செய்தது. முபாரக் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த உயர்ந்த அதிகார அமைப்பான அரசியல் சாசன நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான அட்லி மஹ்மூத் மன்சூரை அதிபராக அமர்த்தி, அவருக்கு வரம்பற்ற அதிகாரங்களை அளிக்

இராணுவ ஆட்சியைக் கண்டித்தும், மோர்ஸியை மீண்டும் அதிபராகப் பதவியில் அமர்த்தக் கோரியும் முசுலீம் சகோதரத்துவக் கட்சி தலைநகர் கெய்ரோவில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவரை மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லும் மோர்ஸியின் ஆதரவாளர்கள்



கும் தற்காலிக அரசியல் சாசனச் சட்டங்களை இயற்றி வெளியிட்டுள்ளது. அதேபொழுதில் தன்னை சைவப் புலியாகக் காட்டிக்கொள்ளும் நோக்கில் அடுத்த ஆறேழு மாதங்களுக்குள் புதிய தேர்தலை நடத்தவிருப்பதாகவும் இராணுவம் அறிவித்திருக்கிறது.

மோர்ஸியின் எதிர்ப்பாளர்கள் அனைவரும் - இடது சாரிகள், தொழிற்சங்கங்கள், முதலாளித்துவ தாராளவாதிகள், முபாரக்கின் ஆதரவாளர்கள், கிறித்தவ சிறுபான்மை அமைப்புகள், இணையதள செயல்பாட்டாளர்கள் எனப் பல பட்டறைகளும் இணைந்துள்ள வானவில் கூட்டணி இது - தேசிய மீட்பு முன்னணி என்ற கூட்டணியை அமைத்து இராணுவத்திற்கு ஆதரவாக நிற்கிறார்கள். ஏப்ரல் 6 இயக்கம், புரட்சிகர சோசலிசவாதிகள் உள்ளிட்ட சில நகர்ப்புற குட்டி முதலாளித்துவ அமைப்புகள் ஒருபுறம் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு இன்னொருபுறம் தேசிய மீட்பு முன்னணியோடும் இணைந்து நிற்கின்றன. முசுலீம் சகோதரத்துவக் கட்சிதான் தற்பொழுது இந்த இராணுவ ஆட்சிக்கு எதிராகத் தெருப் போராட்டங்களை நடத்தி வருகிறது; இராணுவத்தின் துப்பாக்கித் தோட்டாக்களையும் எதிர்கொள்கிறது. ஆனால், ஜனநாயகத்துக்காகப் போராடியதாகப் பீற்றிக்கொள்ளும் தேசிய மீட்பு முன்னணியின் தலைமையோ, இந்த ஆட்சி மாற்றத்தை இராணுவப் புரட்சி என விமர்சிப்பவர்களை, எகிப்து மக்களின் எதிரிகள் என முத்திரை குத்துவதோடு, இராணுவம் கட்டவிழ்த்துவிட்டு வரும் அரசவன்முறைகளுக்கும் ஒத்தூதி வருகிறது.

•••

**ஹோ**ஸ்னி முபாரக்கின் பாசிச ஆட்சிக்கு எதிராகத் திரண்ட எகிப்திய மக்களுள் ஒரு பெரும் பிரிவு இன்று வெளிப்படையாக இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது விந்தையாகத் தோன்றினாலும், அந்த எழுச்சி இப்படி பரிகாசத்துக்குரிய வகையில் முடிந்து போவது தவிர்க்க இயலாத ஒன்றாகும். ஆயுதப் போராட்டம், இறுக்கமான ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு, ஒற்றைக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் அமையாததுதான் இந்த எழுச்சிகளின் பலம் எனப் பின்நவீனத்துவவாதிகள் வரிந்து கட்டிக்கொண்டு எழுதினார்கள். அவர்கள் எதனைப் பலம் எனச் சுட்டிக்காட்டினார்களோ, அதுதான் இந்த எழுச்சியின் மிகப் பெரும் பலவீனமாக அமைந்ததோடு, அதனின் சீரழிவுக்கும் காரணமாக அமைந்தது.

ஒரு பாசிச சர்வாதிகாரிக்கு எதிராக வெடித்த மக்கள் பேரெழுச்சியின் பயனை ஒரு மத அடிப்படைவாதக் கட்சி அனுபவிக்க நேர்வது துன்பகரமானதுதான். ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராகப் போராடிய கட்சிகள், அமைப்புகளிலேயே முசுலீம் சகோதரத்துவக் கட்சி மட்டும்தான் எகிப்தின் கிராமப்புறங்கள் வரை அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட கட்சியாக இருந்தது. இந்த அமைப்பு பலம்தான் ஹோஸ்னி முபாரக் பதவியை விட்டு விலகிய பின் நடத்தப்பட்ட புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள், அதிபர் தேர்தல் ஆகியவற்றில் முசுலீம் சகோதரத்துவக் கட்சி வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தது.

இந்த எழுச்சியின் தலைவர்கள், ‘‘ஒரு புரட்சிகரமான அரசியல் திட்டத்தின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டக்கூடாது’’ என்பதில் மிகுந்த கவனத்துடன் இருந்தனர். மேலும் இந்த எழுச்சி, அரசைப் பற்றிய கண்ணோட்டத்தில் முதலாளித்துவ வரம்பையும் தாண்டவில்லை. எகிப்தைப் பொருத்தவரை, அந்நாட்டு இராணுவம் ஹோஸ்னி முபாரக்கின் பாசிச ஆட்சியைத் தாங்கிப் பிடித்த அடக்குமுறை இயந்திரமாக மட்டும் இயங்கவில்லை. எகிப்து பொருளாதாரத்தில் ஏறத்தாழ 10 சதவீதம் முதல் 35 சதவீதத்தைக் கட்டுப்படுத்தும் அளவிற்குப் பல்வேறு தொழில்களையும் நடத்தி வருகிறது. அதனின் அதிகாரத்தை மட்டுமல்ல, அதனின் வரவு-செலவுகளைக்கூட நாடாளுமன்றம் உள்ளிட்டு யாரும் கேள்விகேட்க முடியாதபடி தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, இப்படிபட்ட இராணுவத்தை ஒழிக்காதவரை எகிப்தில் எந்தவிதமான அரசியல் மாற்றங்களுக்கும் இடமே இருக்கப் போவதில்லை.

இராணுவம் மோர்ஸியின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய ஜூலை-26 அன்று, இராணுவத்தை ஆதரித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் திரண்டிருக்கும் எகிப்து மக்கள்



ஆனால், 2011 மார்ச்சில் நடந்த எழுச்சியின் பொழுது ஹோஸ்னி முபாரக் வேறு, எகிப்திய இராணுவம் உள்ளிட்ட அதிகார வர்க்கம் வேறு எனப் பாமரத்தனமான கருத்துக்கள் பரப்பப்பட்டு, எகிப்து இராணுவம் முபாரக்கிற்கு எதிரான மக்கள் எழுச்சியை ஆதரிப்பதாக ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டு, மக்கள்

நம்பவைக்கப்பட்டனர். இதன்மூலம் முபாரக்கை வெளியேற்றியதே எழுச்சியின் வெற்றியாகக் காட்டப்பட்டது. ''ரொம்பவும் புரட்சிகரமான கோரிக்கைகள் என்பதாக அல்லாமல், அரசு மாற்றம், ஜனநாயகம், மனித உரிமைகள், ஊழல் ஒழிப்பு என்கிற அடிப்படையில் சகல தரப்பினரும் ஒன்றாக்கப்பட்டனர்'' எனக் குறிப்பிட்டு இப்போலித்தனமான வெற்றிக்கு வக்காலத்து வாங்கிய அ.மார்க்ஸ் போன்ற பின்நவீனத்துவவாதிகள், '' இதுவொரு பன்மைத்துவ அரசியல் செயல்பாடென்றும், இதற்கு மாறாக, புரட்சிகரமான கோரிக்கைகளை முன்வைப்பது பிளவுவாதத்திற்கு இட்டுச் செல்வதாகும்'' எனப் பீதியூட்டினர். ஆனால், அக்கும்பல் தூக்கிப் பிடித்த இந்தப் பன்மைத்துவம்தான் ஹோஸ்னி முபாரக் பதவியிலிருந்து துரத்தப்பட்டவுடன் இராணுவ கவுன்சில் அரசு பொறுப்பை எடுத்துக் கொள்வதற்குக் காரணமாக இருந்தது.

எகிப்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் அரசியல் சாசனத்திற்கான தேர்தல், அதிபர் தேர்தல், நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தாலும், இராணுவம் ஆட்சியதிகாரத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க விரும்பாமல் பல்வேறு சதிகளை நடத்தியது. அதிபர் தேர்தலில் முபாரக் ஆட்சியின்பொழுது பிரதம மந்திரியாக இருந்த அகமது ஷாஃபிக் மோர்ஸிக்கு எதிராக இராணுவக் கும்பலால் நிறுத்தப்பட்டார். அகமது ஷாஃபிக் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு விதிக்கப்பட்டிருந்த தடையை எகிப்தின் உச்ச நீதிமன்றம் வலிய வந்து நீக்கி, இராணுவத்துக்கு உதவியது.

அதிபர் தேர்தலில் போட்டியிட்ட தாராளவாத, மதச் சார்பற்ற முதலாளித்துவ கட்சிகள், இடதுசாரி அமைப்புகள் ஆகியவை போதிய வாக்குகளைப் பெற முடியாமல் முதல் சுற்றிலேயே தோற்றுப் போய்விட, அதிபர் தேர்தலின் இறுதிச் சுற்றில் எகிப்து மக்களின் முன் இரண்டு வாய்ப்புகள்தான் இருந்தன. ஒன்று, அவர்கள் மத அடிப்படை வாதக் கட்சியைச் சேர்ந்த மோர்ஸியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அல்லது, இராணுவத்தின் கையாளான அகமது ஷாஃபிக்கிற்கு ஓட்டுப் போட வேண்டும். இந்நிலைமைக்கு எதிராகப் பல்வேறு கட்சிகள், அமைப்புகளால் தேர்தல் புறக்கணிப்பு ஓர் உத்தியாகக் கையாளப் பட்டாலும், அது தேர்தலை ரத்து செய்யும்படி இராணுவக் கும்பலை நிர்பந்திக்கும் அளவிற்குப் பலம் வாய்ந்ததாக அமையவில்லை.

எகிப்தில் நடந்துள்ள இராணுவப் புரட்சியின் சூத்திரதாரியான இராணுவ அமைச்சர் ஜெனரல் அப்துல் - ஃபதா அல்-ஸிஸி





எகிப்து இராணுவத்தால் அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, சட்டவிரோதக் காவலில் வைக்கப் பட்டுள்ள முகம்மது மோர்ஸி

அதிபர் தேர்தலில் மோர்ஸி வெற்றி பெறும் சூழ்நிலை இருந்ததைப் புரிந்து கொண்ட இராணுவம், ஆட்சி அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுவதில் தனது பங்கை உறுதி செய்து கொள்ளும் விதமாகப் பல்வேறு ஆணைகளைப் பிறப்பித்தது. இவற்றின்படி, நாட்டின் அதிபர் இராணுவத்தின் தலைவராக (Commanderin Chief) இருப்பது ரத்து செய்யப்பட்டு, அந்த அதிகாரம் இராணுவ கவுன்சிலின் தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டது; இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் மற்றும் அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஆகியவையும், உள்நாட்டில் இராணுவத்தை நிறுத்துவது அல்லது அயல்நாட்டின் மீது படையெடுக்க உத்தரவிடுவது ஆகிய அதிகாரங்களும் அதிபரிடமிருந்து பறிக்கப்பட்டு, இராணுவ கவுன்சிலிடமே ஒப்படைக்கப்பட்டது. இவை அனைத்திற்கும் மேலாக, புதிய நாடாளுமன்றத்தை அரசியல் சாசன நீதிமன்றத்தின் உதவியோடு இராணுவம் கலைத்தது. சுருக்கமாகச் சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் ஒரு பொம்மை அதிபராக்கப்பட்டார். எகிப்தின் உண்மையான ஆட்சியாளர்களாக அரசுப் படைகளின் உயர் மன்றம் (Supreme Council for Armed Forces) முடிசூட்டிக் கொண்டது.

இராணுவத்தின் இந்தச் சதிகளுக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு இருந்தாலும், அது இராணுவத்துக்கு எதிரான வலிமை வாய்ந்த அரசியல் ஆர்ப்பாட்டங்களாக மாற்றப்படவில்லை என்பது தற்செயலானதல்ல. எதிர்த்தரப்பின் முக்கியத் தலைவர்களான முகம்மது எல்-பராதேய், அகமது ஷாஃபிக், தரகுப் பெருமுதலாளியான மம்தௌஹ் ஹம்ஸாஹ், பாசீம் யூசுப் உள்ளிட்டோருக்கும் எகிப்து இராணுவத்துக்கும் இடையே உள்ள உறவு; இக்கும்பலுக்கும் அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியாவிற்கும் இடையே உள்ள உறவிலிருந்துதான் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முகம்மது மோர்ஸி இராணுவத்தோடு அதிகாரப் போட்டியில் இறங்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். இராணுவத்தால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும்

கூட்டுவதற்கு அவர் இட்ட கட்டளையை எகிப்தின் அரசியல் சாசன நீதிமன்றம் ரத்து செய்தது. மார்ச் 2011-இல் நடந்த மக்கள் போராட்டத்தின் மீது பல்வேறு அத்துமீறல்களை நடத்திய போலீசார் மற்றும் இராணுவத்தினர் மீது விசாரணை நடத்துவதற்கு அமைக்கப்பட்ட கமிசன், ஒருவர் பின் ஒருவராக குற்றவாளிகளை விடுதலை செய்து வந்த நிலையில், அக்கமிசனின் ஆயுட்காலத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த அப்துல் மெகுயித் மகம்மதுவை (இவர் ஹோஸ்னி முபாரக்கின் அடிவருடிகளுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது) மாற்ற மோர்ஸி எடுத்த முயற்சி களும் தோற்கடிக்கப்பட்டன. இன்னொருபுறம், புதிய அரசியல் சாசனத்தை எழுதுவதில் முசுலீம் சகோதரத்துவக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் மற்ற கட்சிகளின் பிரதிநிதி களுக்கும் இடையே முரண்பாடு முற்றி வந்தது.

இந்நிலையில் அதிபர் மோர்ஸி தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆட்சியதிகாரத்தில் முசுலீம் சகோதரத்துவக் கட்சியின் பங்கை உறுதிப்படுத்தும் பல்வேறு உத்தரவுகளை அடுத்தடுத்து பிறப்பித்தார். குறிப்பாக, அரசியல்சாசன சபையையும் அதன் நடவடிக்கைகளையும் ஆய்வு செய்ய நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தை ரத்து செய்ததோடு, தனது இந்த உத்தரவுகளை நீதிமன்றம் ஆய்வுக்கு உட்படுத்துவதையும் தடை செய்தார்.

மோர்ஸி தான் பதவி வகித்த குறுகிய காலத்தில் முபாரக்கின் முப்பது ஆண்டு கால ஆட்சியைவிட ஒரு கொடிய அடக்குமுறையைத் தொழிற்சங்கங்களின் மீது ஏவிவிட்டார். காசா முனை மீது இசுரேல் நடத்திய தாக்குதலின்பொழுது இசுரேல்-அமெரிக்க கூட்டணிக்கு ஆதரவாக நடந்துகொண்டார். ஐ.எம்.எஃப்.-இடமிருந்து 480 கோடி அமெரிக்க டாலர்களைக் கடன் பெறுவதற்காக அது இட்ட நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டார். இவையெதுவும் தீவிரமாக எதிர்க்கப்படாத அதேசமயம், மோர்ஸி தனது உத்தரவுகளின் மூலம் முசுலீம் சகோதரத்துவக் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு ஏற்றபடி புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கி நிறைவேற்ற முயல்கிறார்; ஒரு மதவாத ஆட்சியை நிறுவ முயலுகிறார் என்பது மட்டுமே மையப்படுத்தப்பட்டு எதிர்க்கப்பட்டது.

அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ள இராணுவமும் முசுலீம் சகோதரத்துவக் கட்சியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று பார்க்கப்படாமல், தாக்குதல் இலக்கில் மோர்ஸியும் முசுலீம் சகோதரத்துவக் கட்சியும் நிறுத்தப்பட்டன. கலகம் எனப் பொருள்படும் ''தாமோரோட்'' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, மோர்ஸிக்கு எதிரான பிரச்சாரம் தீவிரப்படுத்தப்பட்டது. இவை அனைத்தின் பின்னணியில் கார்ப்பரேட் பத்திரிகைகளும், முபாரக்கின் ஆதரவாளர்களான பெருமுதலாளிகளும், சவூதி அரேபியாவும் ஒளிந்திருந்தனர்.

''முபாரக்கால் ஊட்டி வளர்க்கப்பட்ட இராணுவம், முபாரக்கால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள், போலீசு மற்றும் அதிகார வர்க்கம் - இக்கும்பல்தான் இப்பொழுது எகிப்தை ஆள்கிறது. இது முபராக் இல்லாத முபராக்யிசம்'' என்கிறார், அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் நவீன அரபு அரசியல் புலப் பேராசிரியர் ஜோஸப் மஸாத். ''இதற்காகவா இலட்சக்கணக்கான மக்கள் போராடத் துணிந்தார்கள்? பல நூறு பேர் தங்களின் உயிரைத் தியாகம் செய்தார்கள்?'' எனக் கேட்டால், ''இதுவும் ஒரு மாற்றம்தான்'' எனப் பின்நவீனத்துவவாதிகள் உறுமுகிறார்கள். மேலும், இன்று இராணுவத்துக்கு ஆதரவாக நிற்கும் அமைப்புகள் நாளை இராணுவத்துக்கு எதிராகவும் திரும்பும் என்று அருள்வாக்கு சொல்லுகிறார்கள்.



இராணுவத்தால் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள
முன்னாள் அதிபர் முபாரக்கின் விசுவாசியும்
உச்ச நீதிமன்ற நீதிபதியுமான அட்லி மஹ்மூத் மன்சூர் (இடது)
மற்றும் துணை அதிபராக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்க
விசுவாசி முகம்மது எல்-பராதேய்.

தேர்தல்கள், நாடாளுமன்றம் என எத்தனை முக்காடுகளைப் போட்டுக் கொண்டாலும் இராணுவ ஆட்சி என்பது ஒரு கொடுங்கோலாட்சிதான் என்பதற்கு உலகெங்கிலும் அநேக உதாரணங்களும் அனுபவங்களும் இருக்கும் நிலையில், அதனை நேரடியாகப் பட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய அவலத்திற்குள் எகிப்து மக்கள் தள்ளப்பட்டிருப்பதை எப்படி ஆதரிக்க முடியும்? எதிரும்புதிருமாக நின்று மோதிக்கொள்ளும் முசுலீம் சகோதரத்துவக் கட்சி, இராணுவம் — இவை இரண்டுக்கும் அப்பாற்பட்ட, முரணற்ற ஜனநாயகமும், புரட்சிகரமான சமூக மாற்றத்தையும் உள்ளடக்கிய மூன்றாவது தீர்வு என்று எதுவுமே இல்லை எனப் பித்தலாட்டம் செய்து, இராணுவ ஆட்சியை மட்டுமே உடனடி மாற்றாக முன்நிறுத்துவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும். மோதிக் கொள்ளும் இரண்டு தரப்பில், அந்தச் சமயத்தில் குறைவான தீங்கு நிறைந்த சக்தியை (lesser evil) ஆதரிப்பது என்ற தந்திரத்தோடு, முபாரக்கிற்குப் பதிலாக மோர்ஸி, மோர்ஸிக்குப் பதிலாக இராணுவம் எனப் பின் நவீனத்துவவாதிகள் முன்நிறுத்தும் ஆட்சி மாற்றங்கள், மக்களுக்கு ஏமாற்றத்தையே அளித்து அவர்களை வெகுவிரைவில் விரக்தியும் களைப்பும் அடையச் செய்யும் அபாயம் நிறைந்தவையாகும்.

• திப்பு

# எதிர்கொள்வோம்!

**இணையத்தின் மூலமாகவும் நேரடியாகவும் எமது தோழர்களிடம் எழுப்பப்படும் கேள்விகள், வைக்கப்படும் விமர்சனங்களைத் தொகுத்து அவற்றுக்குத் தக்க பதிலளிக்கும் பகுதி.**

''ஈழமும் தேசிய இனப் பிரச்சினையும்'' என்ற பெயரில் சமரன் வெளியீட்டகம் ஒரு நூல் பதிப்பித்திருக்கிறது. அதில் ஈழம், விடுதலைப் புலிகள் தொடர்பான ம.க.இ.க.வினர் நிலைப் பாடுகள் மீது பல விமர்சனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதாரபூர்வமான அந்நூலுக்கு ஏன் இன்னமும் பதிலளிக்கவில்லை ? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

இக்கேள்வியில் குறிப்பிடப்படும் நூலுக்குப் பதில் சொல்ல அவசியம், அதிலுள்ள அரசியல் பாமரத்தனம். ஈழம் மற்றும் விடுதலைப் புலிகள் தொடர்பாக ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகள் மீது வைக்கப்படும் விமர்சனங்கள் பெரும்பாலும் இந்த அரசியல் பாமரத்தனம் காரணமாகவே எழுகின்றன.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலரிடமும் காணப்படும் இந்த அரசியல் பாமரத்தனத்தைச் சந்தைப் படுத்துகின்றன, ஜூனியர் விகடன், நக்கீரன் போன்ற கிசுகிசு ஏடுகள். தமது அரசியல் பாமரத்தனத்தைக் கோட்பாடாக்குகின்றனர், சமரன் வெளியீட்டகத்தின் கட்டுரையாளர்கள். நம் மீதான விமர்சனங்கள் அனைத்துக்கும் ஏற்கெனவே பலமுறை நாம் பதில் சொல்லியாகிவிட்டது. நமது பதில்களும் நிலைப்பாடுகளும் எவ்வளவு சரியானவை என்று நடைமுறையும் நிரூபித்துவிட்டது. ஆனாலும், புலிகளின் ஆதரவாளர்களில் பலரும் எப்போதும் போல உண்மையை எப்படி இடித்துரைத்தாலும் பொய்மைப் போதையிலிருந்து விடுபட மறுக்கிறார்கள். அதற்கு முக்கியக் காரணம் ஈழத்துக்கும் புலிகள் அமைப்புக்கும் வெளியிலுள்ள சமரன் கட்டுரையாளர்கள் போன்ற அறிவு நாணயமற்றவர்கள்.

''1983-ஆம் ஆண்டுகளிலிருந்து ஈழவிடுதலையை ஆதரித்து'' (1983-இல் எத்தனை ஆண்டுகள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்!) ''வெளியிட்ட அரசியல் பிரச்சார பிரசுரங்களின் தொகுப்பாகும்'' என்று சொல்லிக் கொண்டு ''ஈழமும் தேசிய இனப் பிரச்சினையும்'' என்ற ஒரு நூலை விழா நடத்தி வெளியிட்டிருக்கிறார்கள். அதில் வறட்டுக் கோட்பாடுகளும் சுயமுரண்பாடுகளும் தவறான செய்திகளும் நிரம்பி வழிவது அவ்விழாவில் பங்கேற்றுப் பாராட்டியவர்களுக்கு ஏனோ தெரியாமல் போனது! ஈழ விடுதலையையும் விடுதலைப் புலிகளையும் ஆதரித்து எழுதிய சமரன் குழுவுக்கு ஈழத்தில் இறுதிக்கட்டப் போரும் ஈழ இனப் படுகொலையும் எப்போது நடந்தது என்பதுகூடத் தெரியவில்லை!

2005-ஆம் ஆண்டு நவம்பரில் இராஜபக்சே தலைமையிலான சிங்கள, பௌத்தப் பேரினவாத பாசிச அரசு இலங்கையில் ஆட்சிக்கு வந்தது. 2006 ஜூலையில் ''பேச்சுவார்த்தை எனும் பேரில் சிங்களப் பேரினவாத அரசு ஈழத் தமிழினத்தைப் பூண்டோடு அழித்துவிடும் யுத்தத்தை நடத்திவருகிறது'' என்று சமரன் குழு எழுதியது. அதன்பிறகு, இராஜபக்சே - புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை முறிந்து, இராஜபக்சேவின் பாசிச அரசு நடத்தி வந்த இனவெறிப் போர், முள்ளிவாய்க்கால் - நந்திக் கடலோரம் 2009 மே மாத மத்தியில் ஈழத் தமிழினப் படுகொலையோடு முடிவுக்கு வந்தது. ஈழ இனப் படுகொலை நிகழ்த்தப்பட்டு, இரண்டாண்டுகளுக்குப் பிறகு, விழித்துக் கொண்ட சமரன் குழு 2011 ஜூலையில் கீழ்க்கண்டவாறு (பக். 320) எழுதியது.

''2009-ஆம் ஆண்டு இறுதியிலும் 2010-மே மாதம் வரையிலும் நடைபெற்ற கடைசிக் கட்ட ஈழப்போரில் ஏற்பட்ட இனஅழிவு குறித்து உலகத் தமிழர்கள்......'' என்று 2011-ஆம் ஆண்டு சமரன் குழுவினர் எழுதியிருந்ததாக ''ஈழமும் தேசிய இனப் பிரச்சி னையும்'' என்ற நூலில் (பக்.320) பதிவு செய்துள்ளார் கள். கடைசிக் கட்டப்போரும் இனப் படுகொலையும் ஈழத்தில் எப்போது நடந்தன என்றுகூடத் தெரியாத இவர்கள், ஈழத் தமிழர்க்கெதிராக சிங்கள இராணுவம் நடத்திய ஈழத் தமிழினப் படுகொலையை ''ஏற்பட்ட இனஅழிவு'' என்று தன்னியல்பான நிகழ்வைப் போலவும் சித்தரிக்கின்றனர்.

2006 ஜூலை - 2011 ஜூலை ஆகிய இந்த ஐந்தாண்டு முக்கியக் காலகட்டத்தில், சமரன் குழு சொல்லுவதைப் போல ''சிங்களப் பேரினவாத அரசு ஈழத் தமிழினத்தைப் பூண்டோடு அழித்துவிடும் யுத்தத்தை நடத்திக்கொண்டிருந்த'' போதும், அதிலும் குறிப்பாக 2009 மே மாதத்தில் ஈழத் தமிழினப் படுகொலை நடத்தப்பட்டபோதும் அதன்பிறகு இரண்டாண்டுகளாகவும், சமரன் குழு என்ன செய்தது என்பதற்கான பதிவு எதுவும் அந்நூலில் கிடையாது. ஈழத் தமிழினப் படுகொலை நடத்தப்பட்ட போதும் அதன் பிறகும் இவ்வாறுதான் பெரும்பங்கு தமிழகமும் வெறும் பார்வையாளனாக அமைதி காத்தது. ஒருசில தமிழினவாதக் குழுக்கள், ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகள் அவற்றின் தலைமையிலிருந்த இருந்த மாணவர்கள், வழக்குரைஞர்கள் மட்டுமே ஈழத் தமிழருக்காக இங்கே குரல் கொடுத்துக்

கொண்டிருந்தனர். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் முயற்சியால், ஐ.நா. விசாரணைக் குழு அறிக்கை, அமெரிக்கத் தீர்மானம் ஆகியன வந்தன; அதையொட்டி ஈழத்தின்பால் தமிழக மக்கள் கவனம் திரும்பிய பிறகுதான் சமரன் குழுவும் விழித்துக் கொண்டது. இதுதான் தமிழீழத்தின் மீதும், ஈழத் தமிழர்கள் மீதும் சமரன் குழுவுக்குள்ள அக்கறை. ஆனால், ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகள் தமிழீழத்துக்கு எதிரானவை போலவும் சமரன் குழுதான் தமிழீழ விடுதலைக்கு தத்துவார்த்தத் தலைமை அளித்து வந்ததாகவும் கூசாமல், வெட்கமின்றி அந்நூலில் புளுகப் பட்டிருக்கிறது. இதற்குத் தமிழினவாதக் குழுக்கள் வழக்கம்போல மழுப்பாமலும், ஈழத் தமிழர்கள் தவறாமலும் கருத்துக் கூறவேண்டும்.




சமரன் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட ஈழமும் தேசிய இனப் பிரச்சினையும் என்ற நூலின் வெளியீட்டு விழா அழைப்பிதழ். (கோப்புப் படம்)

மார்க்சியம்-லெனினியம்-மாவோசிந்தனையைத் தனது சித்தாந்த வழிகாட்டியாக சமரசன் குழு கூறிக்கொள்கிறது. ''உண்மை விவரங்களில் இருந்து உண்மையைக் கண்டறிய வேண்டும்'' என்று மாவோ வலியுறுத்தினார். ஆனால், சமரன் குழு இவ்வாறு செய்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறது. இலங்கை மற்றும் ஈழம் குறித்து சமரன் குழு முன்வைக்கும் அல்லது அறிந்துள்ள விவரங்களில் பலவும் உண்மையானவைகளே அல்ல என்பதற்கு அவர்களின் இந்தநூலே தக்க ஆதாரமாக விளங்குகிறது.

எடுத்துக்காட்டாக, ''1947போலிச்சுதந்திர அதிகாரக் கைமாற்றத்துக்குப் பின்.........'' (பக். viii) என்று குறிப்பிடுவதன் மூலம் 1947-ஆம் ஆண்டில் இலங்கையில் அதிகார மாற்றம் நடந்ததாக சமரன் குழு எழுதுகிறது. பிறகு அதேநூலில் ''1948-ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோது அமைந்த இலங்கை அரசு, இரு இனங்களுக்கும் சம உரிமையின் அடிப்படையில் அமைந்த ஓர் ஒன்றியம் அல்ல. (சிங்கள இன - தமிழின ஐக்கியம் மக்கள் விரும்பித் தாங்களாகவே முன்வந்து செய்து கொண்டதல்ல).'' (பக்.37) இவ்வாறு இலங்கை எப்போது சுதந்திர நாடானதென்பதில் தெளிவற்ற சமரன் குழு, அந்நாட்டின் தேசிய இனப் பிரச்சினையை ஆதியிலிருந்து ஆய்வு செய்வதாகக் கருதிக் கொண்டு பிதற்றியுள்ளது.

"இதோடு, இசுலாமிய வர்த்தகர்களுக்கு எதிராக 1915-இல் தாக்குதல் நடத்திய சிங்களவர்களை ஆதரித்து பிரித்தானிய மகாராணியிடம் முறையீடு செய்த சர்.பொன் இராமநாதனை சிங்களவர்கள் தேரில் இழுத்து வந்து கௌரவித்ததை சமரன் குழு குறிப்பிடுகிறது. (பக்.vii)

காலனிய இந்தியாவில் நடந்ததைப் போலவே இலங்கையிலும் நடந்தது. ஆங்கிலக் கல்வி சட்டம் பயின்ற பார்ப்பன மற்றும் பிற மேல்சாதி, மேட்டுக்குடியினர் காலனிய அரசின் நிர்வாக அமைப்பில் இடம் பிடித்துக் கொண்டு இங்கிலாந்து முடியரசுக்குச் சேவை செய்தனர். அதைப் போலவே, இலங்கையிலும் சிங்கள பௌத்த மேட்டுக் குடியினரும் யாழ்ப்பாண வேளாள சாதி மேட்டுக் குடியினரும் ஆங்கிலக் கல்வி சட்டம் பயின்று, காலனிய இலங்கையில் அரசின் நிர்வாக அமைப்பில் இடம் பிடித்துக் கொண்டு இங்கிலாந்து முடியரசுக்குச் சேவை செய்தனர். இந்தவகையில் சிங்கள டான் சேனநாயகா, அவரது மகன் டட்லி சேனநாயகா குடும்பமும் ஈழத்தின் பொன்னம்பலம் அருணாச்சலம், அவரது மகன் பொன்னம்பலம் இராமநாதன் குடும்பமும் ஒன்றுபட்டுத் தலைமை வகித்தன. சிங்கள - ஈழத் தமிழ் சமூகங்களின் சார்பாக இவர்கள் ஒன்றுபட்டு நிறுவிக் கொண்டதுதான், அனைத்து இலங்கை தேசியக் காங்கிரசு கட்சி. இக்கட்சிக்கு தலைமையேற்றிருந்த பொன்னம்பலம் இராமநாதன் (இப்பெயர் சமரன் குழு சொல்வதைப்போல இராமநாதன், பொன்னம்பலம் என்ற இரண்டு நபர்களைக் குறிப்பதில்லை, ஒரே நபர்தான்) இசுலாமியர்கள் மீதான 1915 தாக்குதலில் சிங்களவருக்கு வக்காலத்து வாங்கியதில் சிறப்பு ஏதுமில்லை.

காலனிய காலத்திலிருந்தே தமிழீழத்துக்கான உணர்வும் முன்னெடுப்புக்கான முயற்சியும் நிலவியதாக வரலாற்றுத் தரவுகளைக் கண்டுபிடிப்பதில் சமரன் குழு இறங்கியுள்ளது. இதனால், ''உண்மை விவரங்களில் இருந்து உண்மையைக் கண்டறிவது'' என்ற பாட்டாளி வர்க்க நெறிமுறையைக் கைவிட்டு விட்டது.

இந்தியாவைப் போன்று காலனிய ஆட்சியாளர்களுக்கு எதிராக காந்தி-காங்கிரசு தலைமையிலான தரகு முதலாளிகளின் சமரசப் போராட்டங்களோ, உண்மையான விடுதலைக்கான மக்கள் போராட்டங்களோ இலங்கையில் நடைபெறவில்லை. காலனிய அரசு நிர்வாகத்தில் பங்கேற்று ஆதாயம் அடைவதற்கான போட்

டிதான் சிங்கள மற்றும் ஈழ(உண்மையில் கொழும்பு/யாழ்ப்பாண)த் தரகு முதலாளிகளின் பிரதிநிதிகளிடையே நடந்தது.

''காலனித்துவ நாடாக இருந்த இலங்கை, ஒரு அரைக்காலனித்துவ நாடாக மாறியபோது அந்நாட்டின் அதிகாரம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சிங்கள-தமிழினத் தரகு முதலாளித்துவ அரை நிலப்பிரபுத்துவக் கூட்டுத் தலைமையிடம் மாறிற்று. பேரினமாகிய சிங்கள இனத்தின் அதிகார வர்க்கத் தரகு முதலாளித்துவமும் அரைநிலப்பிரபுத்துவச் சக்திகளும் அந்நாட்டின் (அரசுஇயந்திரத்தைதமது பிடிக்குள்கொண்டுவரவிரும்பி) அதிகாரத்தை முழுவதுமாக அபகரித்துக் கொள்ள விரும்பின. இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பல திட்டமிட்ட நடவடிக்கைகளை அவை மேற்கொண்டன'' (பக்.37) என்கிறது, சமரன் குழு.

சரிதான்; இதன்படி சிங்கள-தமிழினத் தரகு முதலாளிகளுக்கிடையே அதிகாரப்போட்டியால்தான் ஈழ, மலையகத் தமிழர்களுக்கெதிரான குடியுரிமைப் பறிப்பு, மொழி உரிமைப் பறிப்பு, சிங்களக் குடியேற்றம் மூலம் வாழ்வாதாரப் பறிப்பு, கல்வி - மற்றும் அரசு வேலை வாய்ப்புப் பறிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஆளும் சிங்களத் தரகு முதலாளிகள் ஈடுபட்டது. அதே சமயம், தமிழினத் தரகு முதலாளிளோ தமது அதிகாரத்தைத் தக்கவைத்து கொள்வதற்காகவே தமிழினப் பிரச்சினைகளைக் கையிலெடுத்துக் கேடாகப் பயன்படுத்தினர்.

இலங்கையின் சுதந்திரப் பிரகடனத்தின்போதும், அதற்கு முன்னரும் பின்னரும் ஈழப் போராளிக் குழுக்கள் தோன்றி, அவை ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுக்கும்வரை ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொண்டு, இலங்கை அரசிடம் பேரங்கள்நடத்தி ஆதாயங்கள் அடைந்தவர்கள், ஆளும் சிங்கள இன வெறிக் கட்சிகளுடன் மாறிமாறிக் கூட்டணி அமைத்துக் கொண்டு, அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள், இலண்டனில் சட்ட உயர்கல்வி பயின்ற, வடக்கின் ஒடுக்கப்பட்ட சாதிகளையும் கிழக்கின் மக்களையும் கீழானவர்களாகக் கருதிய யாழ் மையவாத, யாழ்ப்பாண ஆதிக்க வேளாள சாதித் தலைவர்கள்தாம்.

கிறித்தவத் தொண்டு நிறுவனங்களின் பலனாய் பெருமளவு கல்வி பயின்ற ஈழ நடுத்தர வர்க்கத்தினர் காலனிய காலத்திலிருந்தே உயர்கல்வியிலும் அரசு நிர்வாகத்திலும் 60 விழுக்காடிற்கு மேல் பிடித்துக் கொண்டிருந்தனர். சிங்கள மக்கள் இதை ஈழத்தமிழர் ஆதிக்கமாகப் பார்த்தனர். இதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சிங்களத் தரகு முதலாளிகளின் கட்சிகள் சிங்களப் பேரினவாதத்தைக் கையிலெடுத்துக் கொண்டன. ஈழத் தமிழரின் நியாயமான பொருளாதார, அரசியல், பண்பாட்டு உரிமைகளைக்கூடப் பறிப்பதிலும், அவர்களின் ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்குவதில் சிங்களத் தரகு முதலாளிகளின் கட்சிகள் போட்டிபோட்டன. அந்நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் கடுமையாகவே, அவை சிங்கள சமூகத்திற்கே எதிரான பாசிசக் கட்சிகளாக பரிணமித்தன. இனவாதத்தின் தீவிரவாதம் பாசிசம்!

50-க்கு 50 விழுக்காடு கோரிக்கை பிரபலம் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரசுக் கட்சி, கூட்டாட்சிக் கோரிக்கை பிரபலம் செல்வநாயகம் தலைமையிலானதமிழரசுக் கட்சி (தமிழில்தான் இந்தப் பெயர், ஆங்கிலத்தில் அதன் பெயர் கூட்டாட்சிக் கட்சி) ஆகிய இரண்டுமே வட்டுக்கோட்டை மாநாட்டு தனியரசுத் தீர்மானம் வரை இப்படித்தான் இருந்தன. அதன்பிறகும் ஈழத்தில் தனியரசு அமைப்பதற்கான திட்டமோ முயற்சியோ எதுவும் அவற்றிடம் கிடையாது.

வவுனியாவிற்குத் தெற்கே தமது வர்க்க நலன்களையும் தமது சொந்தத் தொழிலையும் கொழும்பில் குவித்திருந்த தலைமையினருக்கு செல்வத்தையும் பாதுகாக்க ஒரு அரசியலும், வவுனியாவிற்கு வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களிடம் ஓட்டுப் பொறுக்குவதற்காக மட்டுமே தமிழ்த் தேசிய அரசியலும் தேவைப்பட்டன. அதற்கேற்பவே இவ்விரண்டு கட்சிகளும் தமிழீழச் சிக்கலைக் கையாண்டன.

ஆனால், காலனிய காலத்திலிருந்தே தமிழீழத்துக்கான உணர்வும் முன்னெடுப்புக்கான முயற்சியும் நிலவியதாக வரலாற்றுத் தரவுகளைக் கண்டுபிடிப்பதில் சமரன் குழு இறங்கியுள்ளது. இதனால், ''உண்மை விவரங்களில் இருந்து உண்மையைக் கண்டறிவது'' என்ற பாட்டாளி வர்க்க நெறிமுறையைக் கைவிட்டு விட்டது.

1983, ஜூலையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள இனவெறியர்களால் நடத்தப்பட்ட படுகொலை மற்றும் கலவரத்தின் பொழுது எரிக்கப்பட்டுச் சிதைக்கப்பட்ட யாழ் நூலகம். (கோப்புப் படம்)



1958 முதல் 1983 வரை தமிழீழத் தேசத்தின் மீது 25 ஆண்டுகள் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்ட 'கலவரம்' என்கிற ஆயுதத்தைப் பின்வருமாறு சமரன் குழு பட்டியலிடுகிறது.

''1961-இல் சிறீ எதிர்ப்புக் 'கலவரம்', 1977 சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான 'கலவரம்', 1981-இல் மாகாண சபைத் தீர்வை எதிர்த்த மக்களுக்கு எதிரான படுகொலை, 1983-இல் இலங்கை தழுவிய இனப் படுகொலை........ ''

''இதனால் வெகுண்டெழுந்த வெகுஜன உணர்வின் தாக்கத்தால் சமரசவாதத் தலைவர்களான செல்வா தலைமையில் சமஷ்டிக் கட்சி, பின்னாளில் தமிழர் கூட்டணி, தனித் தமிழீழத் தீர்மானத்தை 1976-ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றியது; 1980 தேர்தலில் ஈழத் தமிழர்கள் தனி ஈழத்திற்கு ஆதரவாக தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்ததால் அக்கட்சி 100 சதவீத இடங்களைக் கைப்பற்றியது'' (பக்.viiiix)



யாழ்ப்பான வேளாள சாதி மேட்டுக்குடியைச் சேர்ந்த பொன்னம்பலம் அருணாச்சலம் (இடது), இராமநாதன் பொன்னம்பலம்.

இங்கே பல தவறான விவரங்களை சமரன் குழு முன் வைக்கிறது:

(1) ''1961-இல் சிறீ எதிர்ப்புக் 'கலவரம்''' நடந்ததாக சமரன் குழு எழுதுவது பிழையானது. மோட்டார் வாகன இலக்கத் தகடுகளில் 'சிறீ' என்று ஆங்கிலத்தில் இருந்ததை சிங்களத்தில் எழுத வேண்டும் என 1958-ஆம் ஆண்டு புகுத்தப்பட்டது. இதை எதிர்த்து 'சிறீ' என்பதற்கான தமிழ் வடிவத்தைப் பயன்படுத்தும் போராட்டத்தை தமிழரசுக் கட்சி நடத்தியது.

அதற்கு முன்னதாக வேலையை இழப்பதாக இருந்தாலும் அரசு ஊழியர்களாக உள்ள தமிழர்கள் சிங்களம் கற்கக் கூடாது; வடமாகாணப் பாடசாலைகளில் சிங்களத்தை விருப்பப் பாடமாகக் கற்பிப்பதை நிறுத்துமாறும் தமிழரசுக் கட்சி பிரச்சாரம்; இதைத் தொடர்ந்து ஏற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தப்படி குடியேற்றத் திட்டங்களில் தமிழருக்கு உரிமை, மாவட்ட சபைகளில் சுயாட்சி உரிமை, சிங்களத்தோடு தமிழையும் அரசகரும மொழியாகக் கொள்வது ஆகிய 'சலுகைகள்' கிடைத்தன.

ஆனால், 'சிறீ' எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து வாகன இலக்கத் தகடுகளில் மட்டுமல்ல; ஊர்கள், கடைகள், தெருக்களின் பெயர்ப் பலகைகளிலுள்ள தமிழ் எழுத்துக்களைத் தார்பூசி சிங்கள வெறியர்கள் அழிக்கும் இயக்கத்தைத் தொடங்கி முடிவில் 1958-இல் முதலாவது நாடளாவிய இனப் படுகொலையை நடத்தினர். ஏற்கெனவே, ''தனி சிங்களச் சட்டம் - 1958 கலவரம்'' என்று சொன்னதையே மீண்டும் 1961 - இல் சிறீ எதிர்ப்புக் கலவரம் என்று கணக்குக் காட்டுகிறது, சமரன் குழு.

(2) 1977 சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான கலவரம் நடந்ததாக சமரன் குழு எழுதுவது பிழையானது : 1977-இல் நடத்தப்பட்டது, சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான கலவரம் அல்ல. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி தனது 1976 வட்டுக்கோட்டை தனியரசு தீர்மானத்தை முன்வைத்து 1977-இல் நடந்த இலங்கை நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டது. தேர்தலுக்கு முன்னதாக ஒரு வாரம் போலீசுக்கு விடுமுறை கொடுத்த ஜெயவர்த்தனே அரசு, குண்டர்களை ஏவி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி மற்றும் மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய எதிர்க்கட்சிகள் மீது கொலைவெறியாட்டம் போட்டது. லங்கா சம சமாஜக் கட்சியைச் சேர்ந்த 9000 குடும்பங்களை விரட்டி வீடுகளை அழித்தது. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஈழத்தில் 35 விழுக்காடு வாக்குகள் பெற்று நியமன உறுப்பினர்களோடு 18 இடங்களைப் பிடித்து எதிர்க்கட்சியானது. அதைத் தொடர்ந்து தனியரசு அமைக்கப் போவதாக வதந்தி பரப்பப்பட்டு ஈழத் தமிழர்கள் மீது கொலை வெறியாட்டம் நடந்தது.

பதவிக் காலம் முடியவிருந்த இலங்கை நாடாளுமன்றத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு 1982-இல்தான் நடந்தது. சர்வஜன வாக்கெடுப்பையும் அதில் ஜெயவர்த்தனே அரசின் தீர்மானத்தையும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உட்பட இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சிகள் அனைத்தும் கடுமையாக எதிர்த்த போதும் கலவரம் எதுவும் இலங்கையில் நடைபெறவில்லை.

(3) ''1981-இல் மாகாண சபைத் தீர்வை எதிர்த்த மக்களுக்கு எதிரான படுகொலை'' நடந்ததாக சமரன் குழு எழுதுவது பிழையானது : முதலாவதாக 1981 -இல் மாகாண சபைத் தீர்வு எனும் ஒன்றை யாரும் வைக்கவேயில்லை. செல்வநாயகத்தின் மருமகன் ஏ.ஜே.வில்சனுக்

கும் ஜெயவர்த்தனேவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேரங்களின் விளைவாக உள்ளூராட்சிக்குரிய அதிகாரமே கொண்ட மாவட்ட அபிவிருத்தி சபைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதைத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மனமுவந்து ஏற்றுக்கொண்டது. ஆனால், விடுதலைப் புலிகள் போன்ற போராளிக் குழுக்கள் ஏற்கவில்லை. ஓரிரு ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1981-இல் நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் அரசு அப்பட்டமான முறைகேடுகளிலும் மோசடிகளிலும் ஈடுபட்டது. யாழ்ப்பாணத்தில், 1981-மே 31 அன்று தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி நடத்திய பேரணியின்போது சிங்களப் போலீசார் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர், ஒருவர் படுகாயமுற்றார்.



சிங்கள்-பௌத்த மேட்டுக்குடியைச் சேர்ந்த டான் சேனநாயகா (இடது) மற்றும் அவரது மகன் டட்லி சேனநாயகா.

அன்று இரவிலிருந்து மூன்று நாட்கள் சிங்களப் போலீசும் துணைராணுவமும் யாழ்ப்பாணத்தில் கொலைவெறியாட்டம் போட்டன. தமிழர் பலர் கொல்லப்பட்டனர்; த.ஐ.வி.கூ. தலைமையகம், அக்கட்சி எம்.பி. வீடு, ஒரு இந்துக் கோவில், ஈழநாடு பத்திரிகை அலுவலகம் ஆகியன தாக்கி அழிக்கப் பட்டன. ஜூன் 1 அன்று புகழ்பெற்ற யாழ் பொதுநூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

(4) 1983-இல் இலங்கை தழுவிய இனப் படுகொலை என்று இங்கே குறிப்பிடும் நிகழ்வை ''தன்னியல்பான தமிழீழ மக்களின் 1983 எழுச்சி'' (பக். xxvii) என்றும் பீற்றிக் கொள்கிறது சமரன் குழு. ஈழத்தின் வரலாற்றில் ''கறுப்பு ஜூலை'' என்று முதலாளிய அறிவுஜீவிகளே குறிக்கும் கோரமான, துயரமான ஒரு நிகழ்வை எழுச்சி என்று எப்படி அதனால் கருத முடிகிறது ?

(5) 1983 ஜூலை இனப்படுகொலை காரணமாக வெகுண்டெழுந்த வெகுஜன உணர்வின் தாக்கத்தால் 1976 வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றியது; ''1980 தேர்தலில் ஈழத்தமிழர்கள் தனி ஈழத்திற்கு ஆதரவாக தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்ததால் அக்கட்சி 100 சதவீத இடங்களைக் கைப்பற்றியது'' என்கிறது, சமரன் குழு. முதலாவதாக 1980 -இல் சமரன் குழு குறிப்பிடுவதைப் போலத் தேர்தல் எதுவும் நடைபெறவில்லை. 1977-இல் தான் இலங்கை நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் நடந்தன. 1982, 1983 ஆகிய பிற்காலத்தில் நடந்த நிகழ்வுகளின் தாக்கத்தால் முற்காலத்திலேயே செயல்படுவது (1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் வந்தது என்பது போன்ற) சிந்தனை சமரன் குழுவைப் போன்ற புரட்சிக் கோட்பாட்டாளர்களுக்குத்தான் தோன்றும்! வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை சமஷ்டிக் கட்சி என்ற ஒரு கட்சி மட்டுமே நிறைவேற்றியது; அதுவே அத்தீர்மானத்தை முன்வைத்து, அந்தத் தேர்தலில் 100 சதவீத இடங்களைப் பிடித்தது என்பதும் உண்மையல்ல. ஒரு கட்சி மட்டும் தமிழர் கூட்டணி ஆகிவிடுமா என்றுகூட சமரன் குழு சிந்திக்கவில்லை!

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு 100 விழுக்காடு ஈழத் தமிழர்கள் ஆதரவு தெரிவித்தார்கள்; அதுவே இப்போதும் தமிழீழத்தையும் புலிகளின் தலைமையையும் ஒருமனதாக ஈழத் தமிழர்கள் ஏற்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் என்று புலிகளும் புலி ஆதரவாளர்களும் நீண்ட காலமாகக் கூறிவருகிறார்கள். இதுவும் உண்மையல்ல. வடக்கிலுள்ள யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களும் கிழக்கிலுள்ள திருகோணமலை, மட்டக்கிளப்பு, அம்பாறை மாவட்டங்களும் சேர்ந்தவைதாம் தமிழீழம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்து த.ஐ.வி.கூட்டணி சந்தித்த 1977 பொதுத் தேர்தல்களில் மேற்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஐந்து மாவட்டங்கள் உத்தேசத் தமிழீழத்தில் மொத்தம் 23 தொகுதிகளைக் கொண்டவை. அவற்றில் த.ஐ.வி. கூட்டணி 16 தொகுதிகளில் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களைக் கொண்ட வடக்கில் மட்டுமே 100 விழுக்காடு-அதாவது அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிபெற்றது. திருகோணமலை, மட்டக்கிளப்பு, அம்பாறை மாவட்டங்களைக் கொண்ட கிழக்கில் மொத்தம் 10-இல் 3 தொகுதிகளில், அதாவது 30 விழுக்காடு மட்டுமே த.ஐ.வி. கூட்டணி பெற்றது. வாக்கு எண்ணிக்கைப்படி பார்த்தால் வடக்கில் 41 விழுக்காடு, கிழக்கில் 26 விழுக்காடும் மொத்தமாகப் பார்த்தால் தமிழீழத்தில் 35 விழுக்காடும் வாக்குகள்தாம் த.ஐ.வி. கூட்டணி பெற்றது. ஆகவே, வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு ஈழத் தமிழர் ஆதரவு குறித்து சமரன் குழு உட்பட புலிகளும் புலி ஆதரவாளர்களும் உரிமை பாராட்டிக் கொள்வது தவறான அடிப்படையிலானது.

இவ்வாறு இலங்கை மற்றும் ஈழத்தைப் பற்றிய உண்மை விவரங்களையே அறியாத சமரன் குழுதான், ஈழ விடுதலைக்குத் தத்துவார்த்தத் தலைமை தாங்குவதாகக் கூறிக்கொண்டு வந்திருக்கிறது!

(தொடரும்)

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and
Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

# “தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் கட்டியமைப்போம்! முதலாளித்துவ பயங்கரவாதத்தை முறியடிப்போம்!”

## – பு.ஜ.தொ.மு.வின் பிரச்சார இயக்கம் – கருத்தரங்கங்கள்




இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலில், தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்க உரிமை கிடையாது என்பது எழுதப்படாத சட்டமாகியுள்ளது. சங்கம் அமைக்க முயற்சித்தால் தொழிலாளியின் குடும்பத்தாரை மிரட்டுவதோடு, அடியாட்களை வைத்து தாக்குவதும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது; ‘ஒர்க்கர்ஸ் கமிட்டி’ என்ற பெயரில் முதலாளியே ஒரு அமைப்பை ஏற்பாடு செய்து அதில் சேரும் தொழிலாளிகளுக்குச் சலுகை கொடுத்து சங்கத்தை உடைக்கின்றனர்; மூன்றாண்டுகள் வேலை செய்தால் வேலை நிரந்தரம் என்று ஆசைகாட்டி அற்பக் கூலிக்குக் கசக்கிப் பிழிந்துவிட்டு, பின்னர் தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிப்பது தொடர்கிறது; தொழிலாளர்களுக்குச் சட்டப்படிகூட ஊதியம் தரப்படுவதில்லை; பணி பாதுகாப்பும் இல்லை. ஒரே வேலையானாலும் பெண்களுக்குக் குறைந்த கூலி தரப்படுகிறது; தொழிலாளர் துறை அதிகாரிகளோ முதலாளிகளின் கைக்கூலிகளாகி நிற்கின்றனர்; ஓட்டுக் கட்சித் தொழிற்சங்கங்களோ முடமாகிக் கிடக்கின்றன. மொத்தத்தில், ஒரு தொழிற்சங்கத்தைக் கட்டுவதற்கே தொழிலாளர்களிடம் நம்பிக்கையூட்டி அணிதிரட்ட வேண்டிய நிலைமைதான் உள்ளது.

இந்நிலையில் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு, தங்களுக்கான புதியதொரு சங்கத்தைக் கட்டியமைக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியும், தீவிரமாகிவரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை முறியடிக்கவும் அறைகூவி தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பிரச்சார இயக்கத்தை புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி மேற்கொண்டது. கடந்த ஜூன் – ஜூலை மாதங்களில் ஆலைவாயில்களிலும், இரயில், பேருந்துகளிலும், தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளிலும் வீச்சாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக தொழிலாளர்களை அணிதிரட்டி புரட்சிகர கலை நிகழ்ச்சிகளோடு கருத்தரங்கங்களை நடத்தியது.

சிவகங்கையில் ஜூலை 5-ஆம் தேதியன்றும், சென்னையில் 6-ஆம் தேதியன்று அம்பத்தூரிலும், 13-ஆம் தேதியன்று கும்மிடிப்பூண்டியிலும், புதுச்சேரியில் 6-ஆம் தேதியன்றும், திருவரம்பூரில் 7-ஆம் தேதியன்றும் கருத்தரங்கங்கள் நடைபெற்றன. ஓசூரில், முதலாளிகளின் லாபவெறியையும் பயங்கரவாதத்தையும் சித்தரிக்கும் கேலிச் சித்திரங்கள், பு.ஜ.தொ.மு. நடத்தி வந்துள்ள போர்க்குணமிக்க போராட்டங்களின் வரலாறை விளக்கும் புகைப்படக் கண்காட்சி, வீடியோ படக்காட்சியுடன் 14-ஆம்தேதியன்று கருத்தரங்கம் நடைபெற்றது. அதேநாளில் மதுரை-ஒத்தகடையிலும், கோத்தகிரியிலும் கருத்தரங்கங்கள் நடைபெற்றன. வேலூர் மாவட்டம் ஆம்பூரில் 16-ஆம் தேதியன்றும், கோவையில் 21-ஆம் தேதியன்றும் கருத்தரங்கங்கள் நடைபெற்றன. 19-ஆம் தேதியன்று இராசபாளையத்தில் இக்கருத்தரங்கம் பொதுக்கூட்டமாக நடத்தப்பட்டது.

கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் இந்தியத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் (ஐ.எப்.டி.யு.) செயலாளர் தோழர் பிரதீப் பங்கேற்று சிறப்புரையாற்றினார். புதுச்சேரியிலும் திருவரம்பூரிலும் நடைபெற்ற கருத்தரங்கங்களில் அரசு அதிகாரிகள் சங்கங்களின் தேசிய கூட்டமைப்பின் தலைவரான புதுடில்லியைச் சேர்ந்த தோழர் அசோக்ராவ் சிறப்புரையாற்றினார். பு.ஜ.தொ.மு மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன், மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சுப. தங்கராசு, மாநில இணைச் செயலாளர் தோழர் சுதேஷ்குமார், மாநில அமைப்புச் செயலாளர் தோழர் வெற்றிவேல் செழியன், ம.க.இக. மாநில இணை செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் இக்கருத்தரங்களில் பங்கேற்று உரையாற்றினர்.

பணி நிரந்தரச் சட்டம், காண்ட்ராக்ட் முறை ஒழிப்புச் சட்டம் உள்ளிட்ட தொழிலாளர் நலச் சட்டங்களை கறாராக நடைமுறைப்படுத்த வேண்டும்; இச்சட்டங்களை மீறுகின்ற முதலாளிகள் மீது கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; புதிய தொழிற்சங்கம் தொடங்க விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்; முதலாளிகளின் ஒர்க்கர்ஸ் கமிட்டியைத் தடை செய்ய வேண்டும்; அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 15,000 நிர்ணயிக்கப்பட வேண்டும்; பெண் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பும் ஊதிய சமத்துவமும் வழங்கப்பட வேண்டும்; மக்களை உளவு பார்க்கும் ஆதார் அட்டை திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் – என இக்கருத்தரங்கங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சீரழிவிலும் உணர்வற்ற நிலையிலும் தொழிலாளி வர்க்கம் தள்ளப்பட்டுள்ள நிலையில், வர்க்க உணர்வோடு ஆண் – பெண் தொழிலாளர்கள் திரண்ட இக்கருத்தரங்கங்கள் புதிய நம்பிக்கையை விதைத்து, நாளைய போராட்டத்துக்கான முன்னறிவிப்பாக அமைந்தன.

– பு.ஜ. செய்தியாளர்கள்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# காசநோய் சிகிச்சையைத் (டாட்ஸ்) தனியார்மயமாக்கும் சதி!

தொற்று நோய்களுள் மிகக் கொடியதும் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லையென்றால் ஆளையே கொல்லக்கூடியதுமாகும் காச நோய். தற்சமயம் நமது நாட்டில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 15 இலட்சமென்றும், காசநோயினால் ஆண்டுதோறும் 55,000 பேர் இறந்து போகிறார்களென்றும் அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

காசநோயைக் குணமாக்குவதற்குக் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் தொடர்ந்து மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இடையில் சில நாட்களுக்கு மருந்து எடுக்காமல் விட்டுவிட்டால் அதனின் விளைவுகள் உயிரையே பறித்துவிடும் அளவிற்கு, எந்த மருந்துக்கும் கட்டுப்படாததாக (Drug resistant TB) நோய் முற்றிவிடும். இப்படி நோய் முற்றிய நிலையில் ஏறத்தாழ ஒரு இலட்சம் நோயாளிகள் இந்தியாவெங்கும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ரசியா போன்ற மேலைநாடுகளில் காசநோய் முற்றிப் போன நோயாளிகளைத் தனிமைப்படுத்தி அடைத்து வைத்து சிகிச்சை தருகிறார்கள் என்பதிலிருந்தே, இத்தொற்று நோய் ஆட்கொல்லி எய்ட்ஸைவிட அபாயகரமானது என்பதையும் இந்நோய்க்கு ஒரு நாள்கூடத் தவறாது மருந்து எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் புரிந்து கொள்ளலாம்.

இந்நோய்க்குச் சிகிச்சை எடுத்து வரும் நோயாளிகள் தமது அறியாமையின் காரணமாக மருந்தை இடையிலேயே நிறுத்தி விடுவதால், நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பதோடு, அவர்கள் மருந்தைச் சரியாக உட்கொள்கிறார்களா என்பதை நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று கண்காணிப்பது என்பதையெல்லாம் உள்ளடக்கி டாட்ஸ் (DOTS) என்ற திட்டத்தை மைய அரசு பத்தாண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி, மைய அரசின் நிதியுதவியோடு நாடெங்கும் 13,000 சிறப்பு மருத்துவ மையங்கள் திறக்கப்பட்டன. இந்நோய்க்குத் தேவைப்படும் மருந்து மாத்திரைகளைக் கொள்முதல் செய்வது, அவற்றை விநியோகம் செய்வது ஆகியவற்றுக்கும் மைய அரசே பொறுப்பேற்றுக் கொண்டது.

இப்படிபட்ட நிலையில், இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்தே இம்மையங்களில் காசநோய்க்கு வழங்கப்படும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறதென்றும்; ஆந்திரா, பீகார், நாகலாந்து, மகாராஷ்டிரா உள்ளிட்டுப் பல மாநிலங்களில் இத்தட்டுப்பாட்டைச் சமாளிக்கப் பெரியவர்களுக்கு வழங்க வேண்டிய மருந்து நிறுத்தப்பட்டு, அவை குழந்தைகளுக்குத் தரப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இன்னும் இரண்டொரு மாதங்களில் கையிருப்பு முற்றிலும் தீர்ந்துபோய்விடுமென்றும் கூறப்படுகிறது.

மைய அரசு கடந்த மூன்றாண்டுகளாக காசநோய்க்கான மருந்தைக் கொள்முதல் செய்யாமல் விட்டதன் மூலம் செயற்கையான முறையில் இத்தட்டுப்பாட்டை உருவாக்கியிருக்கிறது. நோயாளிகளுக்குத் தங்குதடையின்றி மருந்து வழங்க வேண்டும்; இல்லையென்றால் நோய் முற்றி அவர்கள் இறந்துவிடக் கூடும் என்பது தெரிந்திருந்தும் கொள்முதலை நிறுத்தியிருப்பது கொலைக் குற்றத்திற்குச் சமமானது.

அரசு மருத்துவமனைகளில் மருந்தில்லையென்றால், அதை வெளிச்சந்தையில் வாங்கிக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. காசநோய்க்கான சிகிச்சையைக் கொல்லைப்புற வழியில் தனியார்மயமாக்கும் சதி இது.

''அரசு மருத்துவமனைகளில் தரப்படுவது போன்ற மருந்துகள் வெளிச்சந்தையில் உடனடியாகக் கிடைக்க வாய்ப்பில்லை. அப்படியே கிடைத்தாலும் அதற்கு மாதமொன்றுக்கு 1,000 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கும்'' என்கிறார்கள் மருத்துவர்கள். இவ்வளவு பெரிய தொகையைச் செலவழிக்க முடியாத நோயாளிகள், கொஞ்ச நாளைக்கு மருந்தை நிறுத்தி வைப்போம் என்ற முடிவுக்கு வருவார்கள். இது நோய் முற்றுவதற்கும் அதனால் மரணத்தைத் தாமே வரவழைத்து வைத்துக் கொள்வதற்கும் வழி வகுக்கும்.

ஏதோ சில இலட்சம் ஏழை நோயாளிகளை மட்டுமே இத்தனியார்மயம் பாதிக்கக் கூடும் எனச் சாதாரணமாக மதிப்பிட்டு விட முடியாது. மாறாக, இத்தொற்று நோய் விரைவாகப் பரவுவதற்கும், அதன் மூலம் கோடிக்கணக்கான இந்திய மக்கள் எதிர்கொள்ள வேண்டிய கொள்ளை நோயாக காசநோய் உருவெடுப்பதற்குமான வாசலைத்திறந்துவிடும் சதியே இத்தனியார்மயம்.

அரசு மருத்துவமனைகளில் காச நோய்க்கு மருந்து வழங்குவதில் உருவாக்கப்பட்டுள்ள தட்டுப்பாட்டைக் கண்டித்து, டெல்லியில் சுகாதாரத் துறை அமைச்சகத்தின் முன்பு நடந்த ஆர்ப்பாட்டம்.

